814

பொன்னி

1 JUN 951
MADRAS

வெளிவந்துவிட்டது!

கிருஷ்ணன்-மதுரம்
வாழ்க்கைப் பாதை

கலைச்சுவை மன்னனின் வாழ்க்கைச் சரித்திரம். சுவையான சம்பவங்கள் நிறைந்தது. நான்கு வர்ண அட்டை. விறுவிறுப்பான நடையில்.

'ஜெகசிற்பியன்' எழுதியது.

விலை 8 அணா.

உங்கள் பிரதிக்கு முந்திக்கொண்டால்தான் கிடைக்கும்

ஏஜெண்டுகள் தேவையான பிரதிகளுக்கு 25% கமிஷன் கழித்து முன்பணம் அனுப்பினால் தான் கிடைக்கும். அல்லது V. P. P. மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

—: விவரங்களுக்கு :—

வெண்ணிலா வெளியீடு

118, பிராட்வே — சென்னை-1.

எல்லாவிதமான அச்சு வேலைகளுக்கும்
எங்களைக் கலந்தாலோசியுங்கள்.

***

பொன்னி அச்சகம்

***

எல்லா வசதிகளும் பொருந்த முதல்தரமான
முறையில் அமைக்கப்பட்டு இயங்குகிறது.

16, சேணியம்மன் கோவில் தெரு, தண்டையார்ப்பேட்டை
— சென்னை — 21 —

அழகான கேசத்திற்கு
பிரஸிடெண்ட்
வெஜிடபிள் ஹேர் ஆயில்
உபயோகிக்கவும்.

RATHOD TRADING CO. SOWCARPET MADRAS. 1

K.P. கேஸ்டராயில்

தனி சித்தாமணக்கு
விதையிலிருந்து தயார்
செய்தது. குமட்டல்,
கசப்பில்லாதது.
குழந்தை முதல்
விருத்தர் வரை
உபயோகிக்கலாம்.
ரசாயன முறைப்படி
தயார் செய்யப்பட்டது.

K.P. கேஸ்டர் ஆயில் ஒர்க்ஸ்
ஆர். எஸ். புரம்.... கோயமுத்தூர்.



வீடும் விளக்கும்

சுகி எழுதியது

வாழ்க்கையின் இன்ப துன்பங்கள்
சுவைபடச் சித்தரிக்கப்பட்டுள்ளன.
இரு நிற அட்டை. 66 பக்கங்கள்.

விலை அணா 8

பொன்னி — சென்னை-21.

---

18 ct. Rolled Gold
7½ Curvex
15 Jewels
Superior



Quality
White
Arabic
Dial
Rs. 85.

GUARANTEED 10 YEARS

For Ladies 18 CT. ROLLED GOLD 5 TANNOETU
15 Jewels Superior Quality White Arabic Dial Rs. 75/-
Guaranteed 10 years

Our Special Catalogue on request, West End & Favre Leuba Watches also available.

RIZVON & BROS., 177, DEVARAJA MUDALI ST., MADRAS 1.

Prize winners of C. No. 47

Ist Prize 1. Jem. Rantharam, Raipur 2. P R. Jayavel, Salem 3. Munnilal' Hoshiarpur 4. Dr Biswas, Karmatar 5. Baburao, Hyderabad Dn. 6. Amlokh singh, Delhi 7. B. S. Srivatsva, Kanpur 8. Ramsingh, Meerut Cantt 9. Indumathy Roy, Burdwan 10. H. R. Joshi, Luthiana 11. BMV Chari, Chittoor 12. P B. Mamer, Bombay 13. V. M. Swamy Madura 14. K V. Rao, Suryapet. In addition 2 persons awarded 2nd prize, 7 IIIrd Prize and 2 Vth Prize.

Full particulars are published in the Rainbow dated 10—4—51

ரிஜிஸ்டர் நே. 249 **ரூ. 25,000 பரிசு** போட்டி நே. 49

M/S Premier Bank of India Ltd-ல் சீல் செய்துவைக்கப் பட்டுள்ள சரியான விடை அவர்கள் அங்கீகாரத்தின்பேரில் பிரசுரிக்கப்படும். முற்றிலும் சரியான விடை அனுப்புபவர் களுக்கு முதல் பரிசு ரூ. 12,000. முதல் இரண்டு வரிசை சரியான விடைக்கு இரண்டாம் பரிசு ரூ. 7000. முதல் ஒரு வரிசை சரியான விடைக்கு மூன்றும் பரிசு ரூ. 3000. முதல் மூன்று நம்பர் சரியான விடைக்கு நான்காம் பரிசு ரூ. 2000. முதல் இரண்டு நம்பர்கள் சரியான விடைக்கு 5-ம் பரிசு ரூ. 1000 அளிக்கப்படும். எங்கள் ஸீல் வைத்த விடைகள்படி எல்லாம் சரியாக இருக்க வேண்டும்.


RAINBOW COMPETITIONS
KEYS NO. 47 63 TO 78=282

66	76	77	63
71	69	68	74
67	73	72	70
78	64	65	75

We hereby certify that the above is the solution in original deposited with us by Rainbow Competitions No. 47 on 5-3-51 in a sealed cover which was opened in our presence to-day and that a copy of the above solution has been lodged with the Bank.

For The Premier Bank of India Ltd.

V. Ramaswamy 28/3/51
Agent, Madras

முடிவு தேதி 27-4-51 விடை 12-5-51

பிரவேசக் கட்டணம் : கூபன் 1-க்கு ரூ. 1-0-0 6 கூபன் கொண்ட ஸெட் 1-க்கு ரூ. 5-0-0

290



விடைகள் கண்டுபிடிக்கும் விதம்:— 65 முதல் 80 வரையுள்ள எண் களைக் கொடுக்கப்பட்டிருக்கும் கட்டங்களில், மேலிருந்து கீழும், இட மிருந்து வலமும், குறுக்காகவும் எப்படிக் கூட்டினலும் 290 வரும்படி யாக அமைக்க வேண்டும். ஒரு எண்ணை ஒரே தடவைதான் உபயோ கிக்க வேண்டும்.

விதிகள்:— தனி வெள்ளைக் காகிதத்தில் தேவையான கட்டத்துடன் எத்தனை கூப்பன்கள் வேண்டுமானலும் எழுதி அனுப்பலாம். ஒவ்வொரு கூப்பனிலும் பெயர், விலாசம், எண்கள் எல்லாம் ஆங்கிலத்தில் விளக்கமாக எழுதப்பட வேண்டும். பிரவேசக் கட்டணத்தைக் கிராஸ் செய்த போஸ்டல் ஆர்டர் மூலமாகவோ அல்லது மணியார்டர் மூலமாகவோ அனுப்பலாம். மணியார்டர் செய்த ரசீதை கூபன்களு டன் சேர்த்து அனுப்ப வேண்டும். வசூலுக்குத் தகுந்தபடி, பரிசு பகிர்ந்து அளிக்கப்படும்; போட்டி சம்பந்தமாக மானேஜர் தீர்ப்பே முடிவானது; சட்டபூர்வமாய்க் கட்டுப்படுவது மாகும். போட்டி முடிவு RAINBOW மாதமிருமுறைப் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் அல்லது 4 அணு ஸ்டாம்பு அனுப்பினுல் விடை அனுப்பப்படும்.

கூபன்கள் அனுப்பவேண்டிய விலாசம் :—

THE RAINBOW COMPETITIONS No. 49

306, (14) Mint Street, MADRAS-1

வெளிவந்துவிட்டது!

உள்ளத்தை உலுக்கும் உயர்தரமான காதல் நாவல்

மோக வலை

விறு விறுப்பும் ஆர்வமூட்டும் சம்பவங்களும் நிறைந்த இந்த நாவலை ஒவ்வொருவரும் அவசியம் படித்துப் பத்திரப்படுத்த வேண்டும். அழகான இருவர்ண அட்டை. 56 பக்கங்கள்.

விலை எட்டு அணுத்தான்

இன்றே உங்கள் பிரதிக்கு முந்திக்கொள்ளுங்கள்.

தபாலில் பெற 9 அணு அனுப்பவேண்டும்.

ஏஜெண்டுகள் 25% கமிஷன் கழித்து முன்பணம் அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம். அல்லது V. P. P. யில் அனுப்பப்படும்.

— விவரங்களுக்கு —

வெண்ணிலா வெளியீடு

118, பிராட்வே :: சென்னை-1

மாதவிடாய் நின்றுபோனதா?

நிகரற்ற மருந்து (தேவி பில்ஸ்) Regd. by the Central Drugs Laboratory of Govt. of India, Under No. CDL / 688

எக்காரணத்தினலும் எத்தனை மாதமானாலும் நின்றுபோன மாதவிடாய் அதிசுலபமாகவும் அதிசீக்கிரமாகவும் தவருமல் உடனே வெளியாகும். அநேக நற்சாக்ஷி பத்திரங்கள் பெற்ற திவ்ய ஔஷதம் உத்திரவாதமுள்ளது. போலி மருந்துகளை வாங்கி ஏமாருதீர்கள். விலை ரூ. 8-8-0 சாதாரண கேஸ்களுக்கு (Ordinary) ரூ. 10-8-0 மாதங்களான கேஸ்களுக்கு (Special) (தபால் செலவு தனி)

கர்ப்பத்தடை

நிகரற்ற மருந்து (ஸ்பெக் பில்ஸ்)

Government Registered No. 266.

12 நாட்கள் சாப்பிட்டால் 6 வருஷத்திற்கு சாஸ்வதமாக கருவைத்தடுக்கும். மாதவிடாய் தவருது. அநேக நற்சாக்ஷி பத்திரங்கள் பெற்ற திவ்ய ஔஷதம். போலி மருந்துகளை வாங்கி ஏமாருதீர்கள். (ஸ்பெக் ஜெல்லி) உபயோகித்தால் டெம்ப்ரவரியாக கருவை தடுக்கும். பில்ஸ் விலை ரூ. 12-0-0 ஜெல்லி விலை ரூ. 6-8-0 (த.சி. தனி)

M/grs: SEENU & CO., Post Box, 1638, MADRAS-1.

பிராஞ்ச்: 134. SERANGOON ROAD. சிங்கப்பூர்.

சிலோன் ஏஜண்ட்: NEW COLOMBO MEDICAL STORES, 82. MAIN ST., கொழும்பு-11.

பொன்னி

பொருளடக்கம்

மலர் 5 | ஏப்ரல் 20, 1951 | இதழ் 3

திருவள்ளுவர் ஆண்டு 1982 சித்திரைத் திங்கள் 7ம் நாள்

இலாபத்தில் பங்கு	.... அறிஞர் அண்ணாத்துரை	5
அரசியலைத் திருத்துங்கள்	.... தலையங்கம்	7
காலமும் கருத்தும்	....	11
கம்யூனல் ஜி. ஒ!	.... கார்ட்டூன்	12
கதையும் கருத்தும்	.... கரு. ராமநாதன்	13
வெறும் கலாட்டா	.... கில்லாடி	14
பிறர் தோட்டத்துப் பூ	.... நாரா நாச்சியப்பன்	17
மணியக்காரர் மகன்	.... ராஜன்	18
மனிதன்	.... புதுமைச்சித்தன்	26
பஸ் நாகரிகம்	.... படம்	32
சர்க்கஸ் ரங்கு	.... டி. ஜே. இன்பராஜ்	33
காலியான இடம்	.... வீர. பழனியப்பன்	37
தமிழ்விருந்து	.... தமிழ்த்தும்பி	49
சீர்திருத்தவாதி	.... உதயம்	56
வளரும் இலக்கியம்	.... அரசன்	61

இலாபத்தில் பங்கு!

அஞ்சி அஞ்சிச் சாவார், அவர் அஞ்சாத பொருளில்லை — என்று கூறும் அளவில்தானே நமது விவசாய மக்கள் இருக்கிறார்கள். அவர்கள் வாழ்க்கையுயர்வது எப்போது! போதிய உணவு இல்லை, வசதியில்லை, வாழ்க்கையே அவர்களுக்கோர் பெருந்தொல்லை. எனினும் மேல்நாட்டு விவசாயிகளைவிட நமது மக்கள், சிறந்த உழைப்பாளிகளாகத்தானே இருக்கிறார்கள். இருந்தும், அவர்கள் வாழ்வு, ஏன் இப்படிக் கிடக்க வேண்டும்? ஆகவே, அவர்களின் வறண்ட தலைக்குக் கொஞ்சம் எண்ணெய்! பஞ்சடைந்த கண்களுக்கு ஒளி! மனைவி மானமுடன் கட்டிக் கொள்ளத் துணி! அவனுக்கு நாகரிகமான ஆடை! நாலு எழுத்தைக் கற்றுக்கொள்ளக் கூடிய வசதி அவன் குழந்தைக்கு! இதையாவது, ஏன் நாம் அவனுக்குக் கிடைக்கும்படி பாடுபடக் கூடாது? அவனிடமிருந்து நாம் பெறும் லாபத்திலே ஏதாவது சிறிது, கொஞ்ச நஞ்சமாவது, அவன் வாழ்க்கைக்காகச் செல விட்டால் என்ன?

[திருச்சி, சர்தார் பட்டேல் பந்தலில் 28–3–51 அன்று நடைபெற்ற உழவர் மாநாட்டில் **அறிஞர் அண்ணாத்துரை** இவ்வாறு குறிப்பிட்டார்.]

பொன்னி

பாரதிதாசன் மணிவிழா மலர்

***

29—4—51 அன்று சிறப்பான
முறையில் வெளிவருகிறது.

விலை அணா 8

***

விற்பனையாளர்கள் தங்களுக்குத் தேவையான பிரதிகளுக்கு முன்பணம் அனுப்பிவிட வேண்டும். சந்தாதார் அனைவருக்கும் மலர் அனுப்பப் படுகிறது. 25—4—51 இதழே மணிவிழா மலராக, அதிகப் பக்கங்களுடன் 29—4—51 அன்று வெளியிடப்படுகிறது என்பதை விற்பனையாளர்கள் குறித்துக்கொள்ள வேண்டுகிறோம்.

அரசியலைத் திருத்துங்கள்

சென்னை அரசினரின் வகுப்புவாரிமுறை உத்தரவு புதிய இந்திய அரசியல் சட்டத்திற்குப் புறம்பானதெனச் சுப்ரீம் கோர்ட் தீர்ப்பளித்துவிட்டது. இத்தீர்ப்பு அனைவரும் எதிர்பார்த்த ஒன்றுதான்! என்றாலும் சென்னை அரசினர் சுப்ரீம் கோர்ட் தீர்ப்பை எதிர்பார்த்துத் தங்கள் நடவடிக்கைகளைத் தள்ளிவைத்திருந்ததனால், இத்தீர்ப்பை அனைவரும் கவனிக்க வேண்டிய கட்டாயம் நேர்ந்திருக்கிறது

சென்னை உயர்நீதி மன்றம் கூறியதைவிட ஒரு படி அதிகம் சென்று சுப்ரீம் கோர்ட் தீர்ப்பு வழங்கியிருக்கிறதென்பதே பொருத்தமாகும். சுப்ரீம் கோர்ட்டார் மீது யாரும் குறைப்படக் காரணமில்லை. டில்லியில் வகுக்கப்பட்ட அரசியலமைப்புக்கு, சென்னை சர்க்காரின் வகுப்புவாரி உத்தரவு மாறுபடுகிறதென்பது அவர்கள் உணரும் உண்மை. அந்த உண்மையைத் தீர்ப்பாக வழங்க வேண்டிய பொறுப்பு அவர்களிடம் தரப்பட்டிருக்கிறது. இந்நிலையில் அரசியல் சட்டத்தையும் மீறி நியாயம் வழங்கப்படுமென்று எதிர்பார்ப்பது வீண் முயற்சியாகவே முடியும்; அவ்வாறே முடிந்திருக்கிறது!

வகுப்புவாரி உத்தரவு, கடந்த முப்பது ஆண்டுக் காலமாகச் சென்னை அரசினரால் அமுல் நடத்தப்பட்டுவருகிறது. இந்த உத்தரவின் பயனாக மக்களுக்கு நன்மை இருந்து வந்திருக்கிறது. தொழிற்கல்வி கற்பிக்கப்படும் கல்லூரிகளிலேயே இந்த வகுப்புவாரி முறையைக் கடைப்பிடித்துவந்திருக்கிறார்கள்; எல்லா வகுப்பினருக்கும் அவரவர்கள் எண்ணிக்கைக்கேற்ப இடமளிக்க இந்த ஏற்பாடு நன்கு பயன்பட்டு வந்திருக்கிறது. மருத்துவக் கல்லூரி, பொறியியற் கல்லூரி ஆகிய கல்லூரிகளில் இட நெருக்கடி அதிகம். படிக்க விரும்புவோர் தொகை மிகுதியாகவும், படிப்பதற்குக் கல்லூரியிலுள்ள வசதி குறைவான அளவினருக்குமாக இருக்கும்போது, மாணவர்களைச் சேர்த்துக்கொள்வதில் ஏதாவது ஒழுங்கு முறையைக் கடைப்பிடிக்கத்தானே வேண்டும்! அந்த ஒழுங்குமுறை எப்படி இருக்க வேண்டுமென்பதுதான் இன்றையக் கேள்வி. மார்க்குகள் அதிகம் வாங்கியவர்களைச் சேர்த்துக்கொள்ளலாம் - இப்படியொரு கட்சி. மார்க்குகள் திறமையைக் காட்டும் நற்சான்றுகளாக விளங்குகின்ற காரணத்தால், மார்க்குகளை மட்டும் கவனிப்பது போதுமென்பது அவர்கள் வாதம். இத்திட்டத்தை ஓரளவுக்கு ஒப்புக்கொண்டு ஆனால் வேறு அடிப்படையில் மாணவர்களைச்

சேர்க்க வேண்டுமென்று கூறுவதுதான் வகுப்புவாரி முறையாகும். மொத்த இடங்களை ஒவ்வொரு வகுப்பினருக்கும் இத்தனை இத்தனை என்று பிரித்துவிடுவது - அதன பிறகு அந்தந்த வகுப்பாருள் 'திறமை'சாலிகளாகச் சேர்த்துக்கொள்வது - இதுதான் இதுவரை நடைபெற்று வந்த திட்டம்.

ஏன் வகுப்புக்கு இத்தனை இடம் என்று பிரிக்கவேண்டும்? மற்ற வேறுபாடுகளை அடிப்படையாக வைத்துக்கொண்டு ஏன் இடங்களை வழங்கக்கூடாது? - இக் கேள்விகள் எழத்தான் செய்யும். ஆனால் கேள்வியை எழுப்புவர்கள் ஒன்று அப்பாவிகளாக இருக்க வேண்டும்; அல்லது நடப்புத் தெரிந்தும் நடிக்கும் குறும்புக்காரர்களாக இருக்க வேண்டும். அப்பாவிகள் நம் நாட்டில் வர்ணாசிரம தருமம் செய்து வைத்திருக்கும் கோடிக்கைகளைக் கண் திறந்து பார்க்கவேண்டும். 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' என்று வள்ளுவர் பாடிவைத்திருக்கும் நாட்டில் எத்தனை விதமான வேறுபாடுகளைச் சாதிப்பாகுபாடு படைத்துவிட்டிருக்கிறது என்பதை உணரும் யாரும் திடுக்கிடாமலிருக்கமுடியாது. சாதிக்குச் சாதி மேலென்றும் கீழென்றும் கதைகள் — சாதிக்குச் சாதி பகை மூட்டும் சாத்திரங்கள் — ஒரு சாதியான் மறறொரு சாதியானைக் கண்ணாலும் காணக்கூடாதெனக்கூறும் கயமை உரைகள் — உடனிருந்து உண்ண மறுக்கும் விதண்டா வாதங்கள் — இப்படித் தனித் தனியாக மக்களை 'நால் வருணம்' ஆக்கிவைத்திருக்கிறது— இப்படியான தனித் தனிக் கூட்டங்களில் வளர்ந்தோர்தான் இன்று தமிழ் நாட்டு மாணவர்கள்! தகப்பன் தையல் வேலை செய்தால் பிள்ளை அதே தொழிலில் எளிதில் புக முடிகிறது. தந்தை தச்சு வேலை மேற்கொள்பவரெனில், பையனும் உளியொன்று கொண்டு உடனமருவதில் வியப்பென்ன இருக்கிறது! இம்முறைப்படியே வழக்கறிஞர் வீட்டுப் பிள்ளை வழக்கறிஞராக வருவதிலும், டாக்டர் வீட்டுப் பிள்ளை டாக்டராக மாறுவதிலும் ஆச்சரியப்படத்தக்க செய்திகள் ஏதுமில்லை. சூழ்நிலைதான் மனிதர் முன்னேற்றத்திற்கோ அல்லது பிற்போக்கிற்கோ காரணமாக நிற்கிறதென்பது வெளிப்படை... வருணாசிரமம் வகுத்துக் கொடுத்தவர்கள், படிக்க வேண்டுமென்னும் சூழ்நிலையைச் சிலருக்கும், மற்றவர்கள் பாடுபட வேண்டுமென்னும் சூழ்நிலையையும் ஏற்படுத்திவிட்டிருக்கிறார்கள். இந்தச் சூழ்நிலையை உணர்ந்தவர்கள்தாம், சில பிள்ளைகள் நன்கு படித்து நல்ல மார்க் வாங்குவதன் காரணத்தையும், சில பிள்ளைகள் 'கோழிமுட்டை'யில் விருப்பம் காட்டுவதையும் தெரிந்து கொள்ள முடியும்.

சிலர் படிப்பதே தங்கள் வாழ்க்கையின் நோக்கமாகக் கொண்டார்கள்; தலைமுறை தலைமுறையாகப் படித்தார்கள் — இப்படி ஒரு கூட்டத்தினர்.

பலர் பாடுபடுவதே தங்கள் பிறவி யெடுத்ததன் பயன் எனக் கருதினார்கள்; தலைமுறை தலைமுறையாகப் படிப்பதிலேயே

நாட்டம் செலுத்தாமல் இருந்து வந்தார்கள். இப்படி மற்றொரு கூட்டத்தினர்.

இவர்கள் இருவரும் சர்க்கார் நடத்தும் பள்ளியில் இடங் கேட்க வந்தால், "முதலில் படிக்காமல் பின் தங்கிவிட்ட பலருக்குக் கொடு. பிறகு சிலரைக் கவனிக்கலாம்" என்றுதானே நியாயம் பிறக்க முடியும்! கம்யூனல் ஜி. ஓ. இப்படித்தான் கட்டளையிடுகிறது!

சுப்ரீம் கோர்ட் வழங்கியிருக்கிற தீர்ப்புப்படி "படித்தவர்கள் உள்ளே வருக; திறமைசாலிகளே, உங்களை வரவேற்கிறோம்" என்று நிலைமை மாறுகிறது. பின் தங்கிய வகுப்பினர் மேலும் பின்தங்கவேண்டிய இக்கட்டான நிலைமை ஏற்பட்டு விட்டது.

இது கொடிய நிலை. நல்லவர்கள் விரும்பத்தகாத நிலை. சென்னை ஆட்சியாளர்கள் வகுப்புவாரி உத்தரவு அமுல் செய்யப்பட வேண்டுமென்பதில் உறுதியாயிருக்கிறார்கள். ஆளும் காங்கிரஸ் கட்சியினர் இந்த உத்தரவை நிலை நிறுத்துவதில் முனைந்து நிற்பதாகவே தெரிகிறது. சென்னை மாநில மக்களிற் பெரும்பாலோர் இந்த உத்தரவு அவசியமென்பதில் ஒரு முகப்பட்டு நிற்கின்றனர். நாட்டில் ஆங்காங்கு நடைபெறும் சொற்பொழிவுகளும், கிளர்ச்சிகளும் இந்நிலைக்கு நற்சான்றாக விளங்குகின்றன.

இப்படியாக அனைவரும் விரும்பும் ஒரு மாறுதல் ஏன் தடைப்படுகிறது? தடையைப் போக்க வழி என்ன? இக் கேள்விகளைச் சென்னை மாநில மக்கள் அனைவரும் தமக்குத்தாமே எழுப்பிக் கேட்கவேண்டும். அப்போதுதான் சரியான விடை கிடைக்கும்.

அரசியலார் சட்டத்தை வகுப்புவாரி உத்தரவு செல்லுபடியாவதற்கேற்பத் திருத்தியாகவேண்டும். இது உடனடியாக நிகழவேண்டியதாகும்; கல்லூரிகள் திறப்பதற்குள் இம் மாறுதல் ஏற்பட்டால்தான், வகுப்புவாரி உத்தரவைக் காப்பாற்ற முடியும். சென்னை அமைச்சர் குழுவினர், எத்தனையோ துறையில் தங்கள் ஆமை வேகத்தைக் காட்டிவருவதுபோல், இத்துறையிலும் காட்டுவது பொருத்தமன்று. மக்கள் எண்ணத்தைத் தட்டியெழுப்பவேண்டும்; டில்லியிலுள்ள 'பெரியவர்கள்' நினைத்தால் இந்த மாறுதல் பிரமாதமானதல்ல. எனவே நம் அமைச்சர்கள் விடாப் பிடியாக நின்று, அரசியலைத் திருத்தும் பணியை முடித்தாகவேண்டும்; அவர்கள் முயற்சி தோல்வியுறுமானால், பதவி பெரிதென்றெண்ணாமல் தங்கள் இடங்களைக் காலிசெய்வதே அமைச்சர்களுக்கு அழகாகும். பொதுமக்கள் , சென்னை அரசினர் இந்நெருக்கடியை எப்படித் தவிர்க்கப் போகிறார்கள் என்பதைக் கவனித்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதுமட்டும் அமைச்சர்களுக்கு நினைவிருந்தால் போதும்.

கவியரசர் பாரதிதாசன்

மணி விழா

20—4—51 முதல் 30—4—51 வரை

திருச்சி தேவர் மன்றத்தில்

கலைஞர்கள்:

என். எஸ். கிருஷ்ணன், டி. ஏ. மதுரம், K. R. ராமசாமி, M. R. ராதா, T. R. மகாலிங்கம், S. V. சகஸ்ரநாமம், M. M. மாரியப்பா, எதார்த்தம் பொன்னுச்சாமி, புளிமூட்டை ராமசாமி, முதலிய பல நடிகமணிகளும், அறிஞர் அண்ணா, E. V. K. சம்பத் ஆகியோரும் பங்குகொள்ளும் **நாடகங்கள்.**

எம். கே. தியாகராஜ பாகவதர், கே. பி. சுந்தராம்பாள், U. R. ஜீவரத்னம், சிதம்பரம் ஜெயராமன், தண்டபாணி தேசிகர், மதுரை சோமு, குமாரி என். ராஜம், கஸ்தூரிபாய், நடனம் A. P. ராஜலெட்சுமி முதலியோர் பங்குகொள்ளும் **இசை நடன நிகழ்ச்சிகள்.**

T. N. ராஜரத்தினம் பிள்ளை, திருவெண்காடு சுப்பிரமணியம், வீருசாமிப் பிள்ளை, பிச்சையப்பா, (கக்காய்) நடராஜ சுந்தரம், அபிநய சுந்தரம், ராகவப்பிள்ளை, தங்கவேல் பிள்ளை முதலியோர் பங்குகொள்ளும் **நாதசுர நிகழ்ச்சிகள்.**

தமிழகத்தின் அறிஞர்கள், தலைவர்களின் சொற்பொழிவுகள் நாள்தோறும் நடைபெறும்.

வாரீர்! வாரீர்!

புரட்சிக் கவியைப் போற்றுவோம்!
புத்துலகச் சிற்பியைக் கொண்டாடுவோம்!

எதார்த்தம் பொன்னுச்சாமி
வரவேற்புக்கழகத் தலைவர்

காலமும் கருத்தும்

பாரதிதாசன் மணிவிழா

நம் கவியரசர் பாரதிதாசனார்க்கு அறுபது நிறைவு மணிவிழா திருச்சிராப்பள்ளி தேவர் ஹாலில் 20-4-51 முதல் 30-4.51 வரை சிறப்பாக நடைபெற விருக்கிறது. ஒவ்வொரு நாளும் நாதசுரம், இன்னிசை, நடனம், நாடகம், இந்த முறையில் தமிழகத்தின் கலைஞர்கள் அனைவரும் கலந்துகொள்ளும் கலை விழாவாகப் புரட்சிக் கவிஞர் மணிவிழா நிகழ்வது மிகப் பொருத்தமேயாகும். தமிழ் மக்கள் திருச்சியில் திரளாகக் கூடி, இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற கவிஞராக விளங்கும் நம் முத்தமிழ் மன்னருக்குத் தமிழ்த்திரு நாட்டின் ஒருமித்த போற்றுதலைக் காட்ட வேண்டுமென்று பெரிதும் விரும்புகிறோம். புரட்சிக் கவிஞர் வாழ்க!

மக்-ஆர்தர் கதி

பழைய தமிழ்ப் பாடல்களில் அரசாங்க உத்தியோகத்தை ஆற்றங்கரையில் நிற்கும் மரத்தோடு ஒப்பிட்டுப் பாடியிருக்கிறார்கள். அஃது எவ்வளவு உண்மையென்பதை மக் ஆர்தருக்கு நேர்ந்த கதி நமக்குத் தெள்ளத்தெளிய விளக்குகிறது. மக் ஆர்தர் எவ்வளவு பெரிய மனிதர்! அவர் வகித்துவந்த பொறுப்புகளின் தன்மைதான் என்ன! அவருக்கு வழங்கப்பட்டிருந்த ஸ்தானத்தின் மதிப்பென்ன! உலக முழுவதற்கும் ஒரு சபை—அந்தச் சபையின் சார்பில் போராடும் சேனைக்கு அவர் தளபதி — இத்தனை பெரிய பதவி ஒரே நிமிஷத்தில் தூள் தூளாகி விட்டது. ட்ரூமன், மக் ஆர்தரை அவர் வகித்துவந்த எல்லாப் பொறுப்புக்களிலிருந்தும் விலக்கி விட்டார் என்ற செய்தியைத்தான் குறிப்பிடுகிறோம். அமெரிக்காவில் இந்தச் செய்தி பலவிதக் குழப்பங்களை உண்டாக்கியிருக்கிறது. மக் ஆர்தரை, ஆதரித்துப் பேச அங்கே பலபேர் இருக்கிறார்களென்றே தெரிகிறது. அவர்கள் மக் ஆர்தரை, அமெரிக்காவின் ஜனாதிபதியாக ஆக்கினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. ஆனால் உலக நாடுகள், மக் ஆர்தர் பதவியிழந்ததில் மகிழ்ச்சி யடைந்திருக்கின்றன என்றால் மிகையாகாது. இம் மகிழ்ச்சிக்குக் காரணம் மக் ஆர்தர் நீக்கம், உலகப் போரைத் தவிர்த்திருக்கிற தென்பதுதான். மக் ஆர்தர் தம் பதவிக் காலத்தில் ஐ. நா. கட்டளைகளையோ, அமெரிக்காவின் கட்டளைகளையோ மதித்து நடக்கவில்லை என்பதுதான் அவர்மீதுள்ள குற்றச்சாட்டு! என்னவாயிருந்தாலும் ட்ரூமனின் இத்தகைய உறுதிவாய்ந்த நடவடிக்கையைப் பாராட்டத்தான் வேண்டும். கொரியாப் போரை ஒரு முடிவுக்குக் கொண்டுவருவதிலும், சியாங்கேஷேக்கைக் கைகழுவு

வதிலும், கம்யூனிஸ்ட் சீனாவை ஒப்புக்கொள்வதிலும் ட்ரூமனின் இந்த உறுதி பிரதிபலிக்குமானால் உலக அமைதி காக்கப்படுவது திண்ணம்.

தபால் கட்டணம்

ரயில் கட்டணத்தை ஏற்றினார்கள்; மக்கள் சரியென்று தலையசைத்தார்கள். இப்போது தபால் கட்டணத்தையும் உயர்த்தியிருக்கிறார்கள். 'உயர்த்தும்' திருப்பணியில் டில்லி அமைச்சர்கள் வல்லவர்களாகத்தான் காட்சியளிக்கிறார்கள். மணியார்டர் கட்டணத்திலும், வி. பி. பி. கட்டணத்திலும் ஏற்படுத்தியிருக்கும் 'உயர்வு' வாணிபத் துறையிலிருப்பவர்களையும், சாதாரண நிலையிலுள்ளவர்களையும் பெரிதும் பாதிப்பதோடு, குழப்பத்தையும் உண்டாக்கும் மாதிரியில் அமைந்திருக்கிறது. வி. பி. பி. செய்பவர்கள் பெரிய கணக்குப் புத்தகங்களை வைத்துக்கொண்டு கூட்டிக் கழித்துக்கொண்டிருக்க வேண்டிய கட்டாயத்தைத்தான் புதிய கட்டண உயர்வு கொண்டு வந்து விட்டிருக்கிறது. உள்ளூர்த் தபாலுக்கு வழங்கப்பட்டிருந்த சலுகையை ஏன் 'ரத்து' செய்தார்களென்பது புரியவில்லை. இத்தகைய கட்டண உயர்வுகளால் வருமானம் கூடுவதற்குப் பதில் குறைவதற்குத்தான் சந்தர்ப்பம் அதிகமிருக்கிறதென்பதை அரசினர் நினைவில் கொள்ள வேண்டும்.

தீர்ப்பு!

எப்போ வருவாரோ?

"என் அன்பல்ல, சற்று என்னைப்பார்" என்றார்.

நான் உடனே, 'விலகுங்கள்' என்றேன். அவர் என்னைவிட்டு அகலவில்லை.

கைகள் இரண்டையும் பிரியமாகப் பிடித்து, 'தளிர்க் கரங்கள்' என்றார். 'கையை விடுங்கள்' என்று வெடுக்கென்று சொன்னேன். அப்போதும் அவர் என்னைவிட்டு நகரவில்லை.

அவருடைய முகத்தைக் காதருகில் கொண்டுவந்தார். ஆத்திரத்துடன் எரித்துவிடுபவள்போல் பார்த்தேன். 'வெட்கம், மானம், ஒன்றுமில்லையா, உங்களுக்கு' என்று திட்டினேன். அப்போதும் அவர் ஒரு அடி கூட அசையவில்லை.

அவருடைய பவளம் போன்ற அதரங்கள் என்னுடைய கண்ணாடிக் கன்னத்தை ஆசையால் தொட்டன...இல்லை, தற்காலத்திற்கேற்ப, முத்தமிட்டன.

நான் பயந்துபோய் விட்டேன். ஆத்திரத்தால் கோபம் கொந்தளித்தது. 'விரும்பாதவளுடன் மேவண்டி அணைவது மனிதத் தன்மையா?' என்று வைதேன்.

வசை மொழிக்காக அவர் வருந்தவில்லை. வெட்கத்தால் அவர் தலை குனியவும் இல்லை. பக்கத்தில், அப்படியே நின்று கொண்டிருந்தார்.

கூந்தலில் மலரைச் சூடினார். 'இஃதெல்லாம் வீண்' என்றேன். அதற்கும் அன்புடன் என்னை நோக்கினாரே ஒழிய அவ்விடத்தை விட்டு அசையவில்லை.

கழுத்தில் போட்டிருந்த, என் மாலையைக் கையில் எடுத்தார். ஏதோ செய்யப் போகிறார் என்று இருந்தேன். என்ன நினைத்தாரோ, என்னவோ, என் பார்வையினின்றே மறைந்து விட்டார். இனி, 'எப்போ வருவாரோ' என்று ஏங்குகிறது இப்போது என் உள்ளம்.

பக்கத்தில் அவர் இருந்தபோது, 'கிட்டே நில்லாதீர்கள், எட்டப் போங்கள்' என்று கடிந்துகொண்டேன். அவரும் போயே போய் விட்டார். இப்போது அவர் இல்லாததைக் குறித்து 'என் அருகில் இல்லையே' என்று ஏங்குகிறேன். அன்பால் அணைத்துக்கொள்ள ஆசைப்பட்டவரை, ஆத்திரத்தால் அதட்டினேனேயென்று வருத்தப்படுகிறேன். ஒருவேளை நடந்தவற்றை எல்லாம் நினைத்து வாரமலேயே இருந்து விடுவாரோ என்று வருந்தி அழுகிறேன். 'எப்போ வருவாரோ' என்று திரும்பத் திரும்ப என் இதயத்தைக் கேட்கிறேன்.

இருந்தபோது இன்பமாகப் பேசாமல், இல்லாதபோது 'அவர் வரவில்லையே' என்று வாடுவதில் பயன் என்ன என்று உள்ளம் என்னையே திருப்பிக் கேட்கிறது.

— கரு. இராமநாதன்

[தாகூர் கவிதையின் மொழிபெயர்ப்பு]

வெறும் கலாட்டா

"இந்தியா இன்னும் சுதந்திரமடையவில்லை; அடிமைத் தளை இன்னும் அகற்றப்படவில்லை" என்று சொன்னால் நீங்கள் மூக்கின்மேல் விரலைவைத்து ஆச்சரியப்படுவீர்களா இல்லையா? நீங்கள் மூக்கின்மேல் விரலை வைத்து ஆச்சரியப்பட்டாலும் சரி, அல்லது விரலின்மேல் மூக்கைவைத்து ஆச்சரியப்பட்டாலும் சரி, இதைக்கேளுங்கள்:

சமீபகாலமாகப் பத்திரிகைகளில் இந்திய சர்க்காரின் விளம்பரம் ஒன்று வந்துகொண்டிருக்கிறது. அதில் இந்தியாவின் விடுதலைக்காக எல்லோரும் உண்ணாவிரதம் இருக்கவேண்டும் என்ற ரீதியில் வேண்டுகோள் விடுக்கப்பட்டிருக்கிறது. இதைப் பார்க்கும்போது இந்திய சுதந்திரத்துக்காக அடிக்கடி மகாத்மா காந்தி அடிகள் உண்ணாவிரதமிருந்த நிகழ்ச்சிகள்தான் நம் ஞாபகத்துக்கு வருகின்றன.

உண்மையில் அவர் அரசியல் விடுதலைக்காகவே உண்ணாவிரதமிருந்து உணவுப் பொருள்களைச் சேமித்தார். அன்னிய ஆட்சியிலிருந்து விடுதலையும் கிடைத்தது. ஆனால் இப்போது நம் முன்னிருக்கும் பிரச்னை உணவு. எனவே, உணவு விடுதலைக்காக இந்திய மக்கள் அனைவரும் உண்ணாவிரதமிருக்க வேண்டுமென்று இந்திய சர்க்கார் விளம்பரம் செய்கிறார்கள். அப்போதுதான் அன்னிய உணவிலிருந்து விடுதலை கிட்டும் என்றும் அவர்கள் கூறுகிறார்கள்.

இந்த 'அன்னிய உணவு விடுதலை' இயக்கத்தைச் சர்க்காரே முன்னின்று நடத்துகிறார்களென்று கருதுகிறேன். இந்த இயக்கத்தின் கொள்கைகளும் நடவடிக்கைகளும் கொஞ்சம விசித்திரமாகத்தான் இருக்கின்றன.

கொள்கைகள்

இந்த இயக்கத்தை எல்லோரும் ஆதரிக்கவேண்டும்.

ஆதரிப்பவர்கள் எல்லோரும் சாப்பிடக் கூடாது; அல்லது அதிகமாகச் சாப்பிடக்கூடாது.

வீட்டுக்கு வரும் விருந்தாளிகளையோ, நண்பர்களையோ சாப்பிடும்படி வற்புறுத்தக் கூடாது; அல்லது அதிகமாகச் சாப்பிடும்படி வற்புறுத்தக் கூடாது. இவ்வளவுதான். வேறு ஒரு சிரமமும் கிடையாது.

நடவடிக்கைகள்

அன்னிய உணவிலிருந்து விடுதலையடைவதற்காக இவர்கள் பல நாடுகளிலும் அரிசி கேட்டிருக்கிறார்கள். கோதுமை கேட்டிருக்கிறார்கள். அமெரிக்கா, ஆஸ்திரேலியா, கானடா, பாகிஸ்தான், ரஷியா, சீனா, பர்மா முதலிய நாடுகளுக்கெல்லாம் 'உணவுப் பாத்திரம்' அனுப்பப்பட்டிருக்கிறது. விரை

வில் பாத்திரத்தை நிரப்பிப் பக்குவமாக அனுப்புப்படி வேண்டுகோள் விண்ணப்பத்தாள்களும் பறந்துகொண்டிருக்கின்றன.

எனவே, என்றைக்கு அன்னிய நாடுகளிலுள்ள 'உணவுப் பொருள்கள்' விடுதலை பெற்று நம் நாட்டில் சுதந்திரமாக உலவுகின்றனவோ அன்றைக்கே நாம் உணவு விடுதலை பெற்றவர்களாவோம்!

* * *

ஆமாம். எப்படி நாம் இந்த அன்னிய உணவுக்கு அடிமைப் பட்டோம்? எப்போது அடிமைப் பட்டோம்! 'மாதம் மும்மாரி, வருடம் முப்போகம்' என்றெல்லாம் அழகாகப் பேசப்படும் நமது நாட்டிலே அன்னிய உணவு ஆதிக்கம் செலுத்துகிறதென்றால் இதை விடக் கேலிக்கூத்து வேறு இருக்கமுடியுமா?

அன்னிய உணவு - அதற்கு நாம் அடிமை. ஏன்?

நாட்டிலே பஞ்சம்!

பஞ்சம் எப்படி வந்தது?

விளைச்சலில்லை!

விளைச்சல் ஏன் இல்லை?

மழை இல்லை!

மழை ஏன்(!) பெய்யவில்லை?

மக்கள் ஒழுக்கக் குறைவாக நடந்துகொண்டார்கள்!

ஆஹா! எவ்வளவு அருமையான பதில்! அதை நான் அப்படியே வரவேற்கிறேன்! ஏனென்றால் சர்க்கார் 'அதிக உணவு உற்பத்தி' செய்யுங்கள் என்று வாயிலும் வயிற்றிலும் அடித்துக்கொண்ட காலத்தில்,

நண்பர்களுக்கு

'பொன்னி' 25-3-51 இதழ் வெளிவரவில்லை. 10-4-51 இதழ் 20-4-51 இதழாக வெளிவந்திருக்கிறது. அடுத்து வரும் 25-4-51 இதழ் பாரதிதாசன் மணி விழா மலராக 29-4-51ல் வெளிவரும். புதிதாக நிறுவப்பட்டிருக்கும் பொன்னி அச்சகத்தில் 'பவர்' வசதி இன்னும் கிடைக்காததாலேயே இத்தாமதம் நேருகிறது. சந்தாதார்களும் நண்பர்களும் தாமதத்தைப் பொருட்படுத்த மாட்டார்களென்று நம்புகிறோம்.

பொறுப்பாளர்.

அதைக் கொஞ்சங்கூட லட்சியம் செய்யாமல் 'அதிக உற்பத்தி' இயக்கத்தை நடத்த ஆரம்பித்தது தான் ஒழுக்கக் குறைவு—பஞ்சத்திற்குக் காரணமாகும்! சமீபத்தில் எடுக்கப் பட்ட சென்ஸஸ் கணக்கில் இந்தியாவில் ஜனத்தொகை கூடியிருப்பது இதனை மெய்ப்பிக்கும்!

* * *

உண்மையில் இந்தியாவின் உணவுக் கர்ஜனை உலகின் மூலை முடுக்கெல்லாம் போய் விழுந்து பெரிய பெரிய நாடுகளையெல்லாம் நடுநடுங்கச் செய்திருக்கிறதென்றே கூறவேண்டும்! இல்லையெனில் அமெரிக்கா அலறியடித்துக்கொண்டு நாங்கள் 50,000 டன் கோதுமை தருகிறோம்

என்று சொல்லுமா? உடனே ரஷியா கூடத் தானும் 50,000 டன் தருவதாக வாக்களித்தது. சீனக்காரர்களும் சிரமசைத்தார்கள்! பாகிஸ்தான் நம்மீது பரிதாபம் கொண்டது! கானடாவோ, கால் நடைகளுக்குப் போடக் கூடிய உணவுப் பொருள்களை உங்களால் சாப்பிடமுடியும் என்றால் அவற்றை 'ஓசி'யாகத் தருவதற்குத் தயார் என்று ஒலி பரப்பியது.

"அப்பாடா! உணவுப் பஞ்சம் இனி ஒழிந்த மாதிரிதான்" என்று எல்லோரும் இறுமாப்புக்கொண்டார்கள். பட்டினிச் சாவு, பட்டினிச்சாவு என்று சட்டசபைகளில் எம். எல். ஏக்கள் மந்திரிகளோடு மாரடித்துக் கொண்டபோது, 'பட்டினிச் சாவு இனி ஏற்படாது; அப்படி யாராவது பட்டினியால் செத்தால் அவர்களைச் சாகவிடாதீர்கள்; கப்பல் வருகிறது' என்று பதிலளித்து வந்தார்கள்.

ஆனால் அமெரிக்கா இந்தியாவின் 'யானைப் பசி'க்கு 50,000 டன் கோதுமையை அனுப்பவில்லை. அதற்குப் பதில் கலாச்சாரக் காங்கிரஸை அனுப்பி வைத்தது. ரஷ்யா மட்டும் சும்மா யிருக்குமா? அதுவும் அமெரிக்காவைப் பின்பற்றி உலக சமாதான இயக்கத்தை அனுப்பிவைத்திருக்கிறது. ஆனால் கோதுமை மட்டும் இன்னும் வரவில்லை.

ஆனால் சிறிய நாடான பாகிஸ்தானும் எளிய நாடான சீனவும் உணவுப் பொருள்களை உடனடியாக அனுப்பிவைத்து இந்தியாவின் வயிற்றை ஓரளவு நிரப்பி வைத்திருக்கின்றன. அவை வாழ்க!

— கில்லாடி

திருமணம்

சென்னைத் தோழர் சி. கே. ராதாகிருஷ்ணன் அவர்களுக்கும் தோழியர் உமையாள் அவர்களுக்கும் திருவொற்றியூரில் 11—2—51 அன்று திருமணம் சிறப்பாக — நடந்தேறியது. மணமக்களுக்கு நம் வாழ்த்து —

பிறர் தோட்டத்துப் பூ

நாரா நாச்சியப்பன்

சின்னஞ் சிறிய வயதினிலே —பள்ளி
 செல்லும் வழியில் ஒருசிறுமி
தின்னும் வடையில் மனம்வைத்தேன் —உள்ளத்
 தேவைக் கதனைப் பறித்துவிட்டேன்.
பின்னும் ஒருநாள் வீதியிலே —அழகு
 பெற்ற பதுமை தூக்கிவந்தாள்
தன்னை மறந்தே சிறுமியினைக் —கையால்
 தாக்கிப் பதுமை தூக்கிவந்தேன்!

கொஞ்சம் வயது சென்றவுடன் —எழில்
 கூடும் பருவம் வந்தவுடன்
வஞ்சி யவளைப் பதுமையென —எதிர்
 வைத்துச் சிரித்து விளையாட
நெஞ்சந் துடித்திட்ட தென்றாலும் —அந்த
 நேரத்தில் பாவையைத் தூக்கிவரக்
கொஞ்சமும் வன்மை சேரவில்லை —இந்தக்
 கோழை யுள்ளத்தில் வீரமில்லை!

காட்டு மல்லிகை என்னிலதை —நான்
 கைப்பற்றிக் கொள்ளல் எளிதாகும் —பிறர்
தோட்டத்துப் பூவைப் பறித்துவந்தால் —மிகத்
 தொல்லை யடைந்திட நேருமன்றோ?
கூட்டுக் கிளியினைப் போலவளை —மிகக்
 கொஞ்சி வளர்த்திட்ட பெற்றோரே
வீட்டில் அடைத்தவள் எழில்மறைத்தார் —இங்கு
 வேதனை கொண்டுநான் வாடுகின்றேன்.

மீசை திருகி நடக்கவில்லை —அந்த
 மின்னலைத் தாக்கிடும் எண்ணமில்லை.
ஓசைப் படாமலே கொல்லைவழி —அவள்
 ஓடிவருவதை யெண்ணி யெண்ணி
ஆசைப் பட்டிங்கு வாடுகின்றேன் —அவள்
 அருட்கண் பார்வையை நாடுகின்றேன்.
பாசங் கொண்டேனிச் செய்தியினை —அந்தப்
 பாவைக் குரைத்திட வேண்டுமடா!

மணியக்காரர் மகன்

"ராஜன்"

கதிரவன் தன் முழுக்கொடுமையையும் காட்டூர்க் கிராமத்தின் மீது காட்டிக்கொண்டிருந்தான்.

கிராமத்து மக்கள் வெயிலுக்குப் பயந்துகொண்டு வீட்டுக்குள்ளேயே அடைந்து கிடந்தார்கள். ஆனாலும் சில வாண்டுப் பயல்கள் அந்த வெயிலுக்குப் பயப்படாமல் ஒரு வேப்பமரத் தடியில் கோலி அடித்துக்கொண்டிருந்தார்கள்.

வேப்பமரத்திற்கு எதிரே சிறிது தூரத்தில் அமைந்திருந்த வீட்டிற்குள்ளிருந்து ஒரு மனிதர் வெளியே வந்தார். அவர்தான் அந்தக் கிராமத்து மணியக்காரர் மாணிக்க முதலியார். அவர், வீட்டு வாயிற்படியில் வந்து நின்றுகொண்டு, வேப்பமரத்தடியில் கோலியடிக்கும் கூட்டத்தை ஒரு தடவை பார்த்தார். பிறகு தொண்டையைக் கனைத்துக் கொண்டு, "டேய், கோபு! இங்கே வாடா!" என்று அதட்டினார்.

அவருடைய குரலைக் கேட்டதும் எல்லாப் பையன்களும் ஓட்டமாக ஓடிவிட்டார்கள்! கோபு மட்டும் கையிலிருந்த கோலிக் குண்டுகளைக் கீழே போட்டுவிட்டு "என்ன அப்பா?" என்று கேட்டுக் கொண்டே பயந்தபடி ஓடிவந்தான்.

"இந்த வெயில்லே என்னடா விளையாட்டு? பால் நிலவு பொழியுதுன்னு நினைச்சுக்கினு இருக்கியா? இனிமே அந்தச் சோம்பேறிப் பயல்களோடே சேர்ந்தியோ, முதுகுத்தோலை உரிச்சுப்பிடுவேன். ஆமாம்!" என்று உறுமினார் அவர்.

கோபு பேசாமல் விரலைக் கடித்துக்கொண்டு தலை குனிந்து நின்றான்.

"சரி, ஓடிப்போய் வரதனிடம் வண்டியைப் பூட்டிக்கினு ஸ்டேஷனுக்குப் போகச்சொல்லு. இப்பவே மணி ரெண்டாவுது. மூணு மணிக்கு ரயில்வே ஸ்டேஷன்லே இருக்கணும்னு சொல்லு" என்றார் மணியக்காரர்.

வெளியூரிலிருந்து யாரோ அவர்கள் வீட்டுக்கு வரப்போகிறார்கள் என்று அறிந்துகொண்ட அந்த வாண்டுப் பயல், உடனே வரதனுடைய குடிசையை நோக்கி ஓடினான்.

அவன் ஓடுவதைப் பார்த்துச் சிரித்துக்கொண்டே மணியக்காரர் திரும்பி வீட்டிற்குள் நுழைந்தார். கூடத்து ஊஞ்சலில் உட்கார்ந்து அதை மெல்ல உந்தித் தள்ளினார். அது கிரீச்சிட ஆரம்பித்தது. அவர் யோசனையில் ஆழ்ந்தார்.

அவருடைய மனைவி மங்களம் அடுப்பங்கரையில் அமளி செய்துகொண்டிருந்தாள். வரப்போகும் விருந்தாளிகளுக்கு அவள் காப்பி பலகாரம் தயார் செய்துகொண்டிருந்தாள்.

கூடத்து ஓரமாக ஒரு நாற்காலியில் உட்கார்ந்திருந்த மணியக்காரரின் மூத்த மகன் ராஜசேகரன் மனக் குழப்பத்துடன் முகத்தைச் சுளித்துக்கொண்டு உட்கார்ந்திருந்தான். சென்னையில் காலேஜில் சேர்ந்து படித்துக்கொண்டிருந்த அவன், பி. ஏ. கடைசிப் பரீட்சையை எழுதிவிட்டு, நான்கு நாட்களுக்கு முன்தான் ஊருக்கு வந்தான். அவன் பிறந்து வளர்ந்தது என்னவோ அந்தக் கிராமத்தில்தான் என்றாலும், பட்டணத்து வாழ்க்கையில் சிறிது காலம் திளைத்துவிட்டுத் திரும்பிய அவனுக்கு அங்கு இருப்புக்கொள்ளவில்லை. அப்பாவின் வற்புறுத்தலின்பேரில் வந்திருந்த அவன் இரண்டு நாளைக்கெல்லாம் "நான் பெங்களூருக்குப் போய் வருகிறேன். அங்கே ஒரு நண்பன் இருக்கிறான். அவனைப் பார்த்துவிட்டு, அப்படியே சென்னைக்குப்போய் ஏதாவது வேலை தேடிக்கிறேன். நான் பெங்களூரிலிருந்து புறப்படுவதற்கும், பரீட்சை ரிஸல்ட் வெளியாவதற்கும் சரியாயிருக்கும்'' என்றான்.

ஆனால் மணியக்காரர் அதற்கு விட்டுக்கொடுக்கவில்லை. "என்னடா, இது? வந்து ரெண்டு நாளாகல்லெ, இதற்குள்ளே புறப்பட்டுவிட்டே! உன் கலியாண விஷயத்தை முடிச்சுக்கினு நீ எந்த ஊருக்காவது போ!'' என்றார் அவர்.

''கலியாணமா? இந்த வருஷமா?'' — அவன் குரல் கம்மியது.

"என்னடா மலைக்கிறே? இப்பவே இருபத்துநாலு வயசாவுது. இன்னும் எப்போ கலியாணம் பண்ணிக்கிறதா உத்தேசம்? இத்தனை வருஷமாத்தான் படிக்கறதைக் கெடுப்பானேன்னு சும்மா இருந்துட்டேன்!'' என்றார் அவர்.

மங்களமும் அதை ஆமோதித்து வற்புறுத்தினாள்.

ராஜசேகரனுடைய மனத்திலிருந்து ஏதோ ஒரு விஷயம் வெளிப்படத் தவித்துக்கொண்டிருந்தது. ஆனால் அதை வெளியிடக்கூடிய அளவுக்கு அவனுக்குத் தைரியம் ஏனோ வரவில்லை! அதற்குப் பதில், "ஏதாவது ஒரு நல்ல வேலை கிடைக்கற வரைக்கும் கலியாணப் பேச்சை எடுக்காதீர்கள்!'' என்று ஒரு போடு போட்டான்.

"அதுக்கும் இதுக்கும் என்னடா சம்பந்தம்? கலியாணம் முடியறதுக்குள்ளே நல்ல வேலையாத் தன்னாலே கிடைக்கப் போவுது!'' என்று சமாதானம் கூறினார் மணியக்காரர்.

"நீங்க சொல்றதைப் பார்த்தால், ஏதோ ஒரு பெண்ணை ரெடியாப் பார்த்து வச்சிருக்காப்பலே இருக்கே! இது என்ன வேடிக்கை!'' என்று சீறினான் ராஜசேகரன்.

"ஆமாம்டா! அப்பாவுடைய நண்பர் ஒருத்தர் பட்டணத்திலே வக்கீலாயிருக்காரு, இல்லையா?'' என்று ஆரம்பித்தாள் மங்களம்.

அட்டைப்படக் கதை

"யாரைச்சொல்றே? வரதராஜ முதலியாரையா?"

"ஆமாம்டா! அவருக்குத் தெரிஞ்ச இடத்துலே ஏதோ ஒரு நல்ல பெண் இருக்குதாம்! பெண் காலேஜுலே படிச்சுக்கினு இருக்குதாம், நிறையச் சொத்துள்ள இடமாம்!"

"உம், அப்புறம்?"

"பெண்ணைப் பையனே நேரிலே பார்க்கட்டும்! அப்புறம் அவன் வேறே பெண்ணைக் கண்ணெடுத்துக்கூடப் பார்க்கமாட்டான், அப்படி இப்படின்னு எழுதியிருக்கார்! அவர் பேச்சிலே எங்களுக்கு எப்பவுமே நம்பிக்கையுண்டு!"

"போதுமே வர்ணனை!" என்று எரிந்து விழுந்தான் ராஜசேகரன்.

"அந்தப் பெண்ணை அவள் அம்மாவோடே கூட்டி இங்கே அனுப்ப ஏற்பாடு பண்ணியிருக்காராம்! நாளன்னிக்கு வருவாங்க! இந்தச் சமயத்திலே நீ பெங்களூருக்குப் போகனும்னு அடம் பிடிக்கறியே! இங்கேயே இருந்து ஜாடை மாடையாப் பெண்ணைப் பார்த்துக்கோ!" என்று முடித்தாள் மங்களம்.

"ஆமாம், ஆமாம்" என்று தலையை ஆட்டினார் மணியக்காரர்.

ராஜசேகரனுக்குச் சங்கடமாகப் போய்விட்டது. தனது பிரயாணத்தை ஒத்திப்போட்டுவிட்டு, நாவல்களைப் படித்து நேரத்தைப் போக்கிக்கொண்டிருந்தான். எப்படியோ அந்தப் புதுப்பெண் வரும் குறிப்பிட்ட நாளும் வந்துவிட்டது.

இன்னும் ராஜசேகரன் நாற்காலியில் உட்கார்ந்து யோசனையில் ஆழ்ந்திருந்தான். மனத்திலிருக்கும் விஷயத்தைப் பளிச்சென்று அப்பாவிடம் சொல்லிவிடலாமா என்று துடித்தான். அந்தத் துடிப்பின் காரணமாக மனம் படபடவென்று அடித்துக்கொண்டதே தவிர, தைரியம் ஏனோ வரவில்லை!

சிறிது நேரம் சென்றது.

இன்னும் ஊஞ்சல் கிரீச்சிட்டுக் கொண்டிருந்தது.

தந்தையும் தனயனும் பேசாமலே உட்கார்ந்திருந்தார்கள்.

வரதன் வீட்டிற்குள் நுழைந்து, "வண்டி ரெடியாயிருக்குதுங்கோ!" என்றான் தயங்கிக்கொண்டே.

"சரி, சீக்கிரம் போடா ஸ்டேஷனுக்கு, மணியாவுது" என்றார் மணியக்காரர்.

அதே சமயத்தில் கோபு உள்ளே ஓடி வந்து, "அப்பா! நான் கூடப் போயிட்டு வர்றேன்!" என்று கெஞ்சினான்.

"சரி, தலையைச் சீவிக்கினுப் போ!" என்று உத்தரவு கொடுத்தார் அவர்.

கோபு குடுகுடுவென்று தலையைச் சீவ ஓடினான்.

ராஜசேகரன் நாற்காலியை விட்டு எழுந்தான். பக்கத்து அறைக்குள் நுழைந்து, கதவைச் சாத்திவிட்டுக் கட்டிலில் சாய்ந்தான். அவன் உத்தரக் கட்டையை முறைத்துப் பார்த்துக்கொண்டிருந்தான். அவனுடைய வாய், "வஸந்தா!" என்று முணுமுணுத்தது. உடனே அவனுடைய மனத்திரையில் நவநாகரிகப் பெண் ஒருத்தி தோன்றி முறுவலித்தாள்!

* * *

ஆறு மாதத்துக்கு முன் நடந்த சம்பவம். ஒரு நாள்......

சனிக்கிழமை மத்தியானம்.

மிட்லண்டில் 'எஸ்தர் வில்லியம்ஸ்' நடிக்கும் 'பேதிங் பியூடி' என்னும் ஆங்கிலப்படம் ஓடிக்கொண்டிருந்தது. கூட்டத்திற்குக் கேட்க வேண்டுமா? மலைப் பாம்பைப்போல் நீண்டதொரு 'க்யூ' வரிசை முடிவில்லாமல் நின்றிருந்தது.

சரியாக இரண்டரை மணிக்கு அங்கு வந்து சேர்ந்த ராஜசேகரன் கூட்டத்தைக் கண்டு மலைத்து நின்றுவிட்டான். டிக்கட் கிடைக்கும் என்ற நம்பிக்கையை இழந்து, அவன் திரும்பிப்போகலாமா என்று யோசித்துக்கொண்டே சுற்றுமுற்றும் பார்த்தான்.

பத்துப் பதினைந்து காலேஜ் பெண்கள் அங்கும் இங்குமாகச் சிதறி நின்று கொண்டிருந்தார்கள். கூட்டத்தைப்பற்றி அவர்களுக்கு என்ன கவலை? புக்கிங் ஆபீஸ் திறந்ததும் அவர்களுக்குத்தானே முதலில் டிக்கட் கிடைக்கும்!

அந்தக் கூட்டத்தில் சிவப்பு ஸாரியும் மஞ்சள் ஜாக்கட்டும் அணிந்து, முன்னே இழுத்து விடப்பட்ட இரட்டைப் பின்னல் மார்பில் துவள, குறுகுறுக்கும் மைதீட்டிய கயல்விழிகளால் ராஜசேகரனையே பார்க்காதது போல் பார்த்துக்கொண்டிருந்தாள் ஒரு நங்கை! ராஜசேகரனும் அவளைப் பார்த்தான். இருவர் பார்வையும் ஒன்றை ஒன்று வெட்டி விட்டு வேறு பக்கம் திரும்பின. அவள் யார்?

ராஜசேகரன் அடிக்கடி அவளைக் கல்லூரி நூல் நிலையத்தில் பார்த்திருக்கிறான். ஆனால் பேசியதில்லை! அவள் அதே காலேஜில் இண்டரில் படிப்பதாக மற்றவர்கள் பேசிக்கொண்டதிலிருந்துபுரிந்துகொண்டான். அவளுடைய பெயர்கூட அவனுக்குத் தெரியும்!

வஸந்தா! — இதுதான் அவளுடைய பெயர். லைப்ரரியிலிருந்து ஒரு புத்தகத்தை எடுத்துக்கொண்டதற்காக அவள் கையெழுத்துப் போடும்போது, பக்கத்திலேயே நின்றிருந்த ராஜசேகரன் அவளுடைய பெயரைத் தெரிந்துகொண்டான்!

அவன் யோசித்துக்கொண்டே நின்றான். இதற்குள் இருவருடைய பார்வையும் நான்கைந்து தடவை ஒன்றை ஒன்று வெட்டின!

திடீரென்று ராஜசேகரனுக்கு எங்கிருந்துதான் தைரியம் வந்ததோ? மெல்ல அவள் அருகில்

சென்று, "மன்னிக்கவும்! எனக்கும் ஒரு டிக்கட் சேர்த்து வாங்க முடியுமா?" என்று ஆங்கிலத்தில் கேட்டுவிட்டு, அசட்டுச் சிரிப்புச் சிரித்தான்.

லிப்ஸ்டிக் பூசிய அவளுடைய அதரங்கள் மெல்ல மலர்ந்தன. "ஓ, எஸ்! முயற்சி செய்கிறேன்!" என்று கண்களை உயர்த்தி ஆங்கிலத்தில் அழகாகச் சொன்னாள்.

"தாங்க்ஸ்" என்று சொல்லிக்கொண்டே பாக்கட்டிலிருந்த மணி பர்ஸை வெளியே எடுத்தான்.

"பணத்தை நீங்களே வைத்துக் கொள்ளுங்கள். அப்புறமாக வாங்கிக்கொள்கிறேன்!" என்று சொல்லிக்கொண்டே, அவள் கையிலிருந்த 'வானிடி பாக்'கை இப்படியும் அப்படியுமாக ஆட்டினாள்.

ராஜசேகரன் சிரித்துக் கொண்டே, மேலே என்ன பேசுவது என்று புரியாமல் விலகி வந்து நின்று கொண்டான். முதல் முதலாக ஒரு வயது வந்த பெண்ணிடம் பேசியதால் அவனுடைய உடம்பில் ஒரு கிலு கிலுப்பு ஏற்பட்டிருந்தது. ஆஹா! அந்தமாதிரி அனுபவம் என்றென்றும் அவனுக்குக் கிடைக்குமா?

சிறிது நேரம் சென்றது.

புக்கிங் ஆபீஸ்கள் திறந்தன.

அவள் ஐந்து நிமிஷத்துக்கெல்லாம் இரண்டு டிக்கட்டுகளை வாங்கி வந்து அவனிடம் ஒன்றைக் கொடுத்து விட்டு, "பின்

புதிய காவியம்

கொடி முல்லை

வாணிதாசன் எழுதியது

விலை அணா 12

தபாற் செலவு தனி

எங்கள் புத்தக விலைப் பட்டியலை எழுதிப் பெற்றுக்கொள்ளுங்கள்.

பொன்னி

சென்னை — 21

பக்கமாக எனக்கும் ஒரு ஸீட் பிடித்துவைக்கிறீர்களா? இதோ ஐந்து நிமிஷத்தில் வந்துவிடுகிறேன்?" என்று இனிமையாகக்கேட்டாள் அவள்.

ராஜசேகரன் தடுமாறிப் போனான். இந்த உலகத்திலேயே அவன்தான் மிக்க அதிர்ஷ்டசாலி என்று நினைத்தான். "ஓ, எஸ்! நிச்சயமாக!" என்றான் அவன்.

அவள் அவசரமாக எங்கேயோ போவதுபோல் போய்விட்டாள்.

அவனுக்கு ஆச்சரியமாக இருந்தது. அவன் தியேட்டருக்குள் நுழைந்தான். தனக்குப் பக்கத்திலேயே ஒரு ஸீட்டை ரிஸர்வ் செய்துவிட்டு அவளுக்காகக் காத்திருந்தான்! அவனுக்

"உரிச்ச வாழைப்பழம் இருக்குங்களா?"

"அதோ மூலையில் இருக்கு! எடுத்துக்கினு காசை அந்தப் பெட்டியில் போட்டுட்டுப் போ!"

குப் பக்கத்திலேயே உட்கார வேண்டும் என்று அவள் அப்படிச் செய்தாளா? அவனும் அதைத்தானே விரும்பினன்!

பத்து நிமிஷம் கழிந்தது: அவள் வந்தாள். பக்கத்தில் உட்கார்ந்தாள். இருவருடைய கைகளும் ஸ்பரிசித்தன!

இருவரும் சிரித்துக்கொண்டார்கள். மெல்ல மெல்ல இருவரும் பேச ஆரம்பித்தார்கள். பெயர்களைப் பரிமாறிக்கொண்டனர். காலேஜைப்பற்றிக் காரசாரமாக வாதாடினர்கள். பேச்சு வளர்ந்தது.

திரையில் படம் ஓடியது!

இருவருடைய பேச்சும் ஓய்ந்தது. ஆனல் கைகள் உறவாடின!

ராஜசேகரன் திரையில் ஓடும் 'பேதிங் பியூடி'யைப் பார்க்கவில்லை! பக்கத்திலிருக்கும் 'பியூடி'யை இருளில் ஊடுருவிப் பார்த்துக் கொண்டிருந்தான்!

அன்று முதல் இருவரிடையிலும் காதல்வளர்ந்தது. லைப்ரரி, கடற்கரை, பார்க், சினிமா — முதலிய இடங்களில் சந்தித்துக் கொண்டார்கள். இருவரும் எவ்வளவோ விஷயங்களைப் பேசிக் கொண்டார்கள். கடிதங்கள் பறந்தன. ஆனல் குடும்ப விஷயங்களைப்பற்றி மட்டும் அவர்கள் ஏனே பேசவேயில்லை! ஒருவரை ஒருவர் பூர்ணமாக அறிந்து கொள்ளவில்லை!

ராஜசேகரனுடைய மனத்தில் அவள் நிலைத்துவிட்டாள். அவன் அவளைப்பற்றி அதிகமாகக் கற்பனை செய்து, அவள் தனக்கே சொந்தம் என்று எண்ணிக்கொண்டான்.

நாட்கள் நகர்ந்தன. பரீட்சை முடிந்தது.

கடைசியாக ராஜசேகரன் வஸந்தாவைப் பார்த்து, "நான் கிராமத்துக்குப் போகிறேன். போனவுடனே உனக்குக் கடிதம் எழுதுகிறேன்" என்றுன்.

அவள் பெண் என்பதற்கு அறிகுறியாக அழுது தீர்த்தாள். அவன் அவளைத் தேற்றினன்.

இருவரும் பிரிந்தனர்.

கிராமத்துக்கு வந்த ராஜசேகரன் ஒன்றும் புரியாமல் விழித்தான். அவனுக்கு அங்கு இருப்புக் கொள்ளவேயில்லை. பெங்களூருக்குப் போவதுபோல் சென்னைக்குப்போய் வஸந்தாவைப் பார்க்கவேண்டும் என்ற பைத்தியம், அவனுடைய மனத்திலேயே குமுறிக்கொண்டிருந்

தது! அப்பாவிடம் உண்மையைச் சொல்லிவிடலாமா என்று நினைத்தான். ஆனால் அதற்கு அவனுக்குத் தைரியம் வரவில்லை! சீக்கிரமே சென்னைக்குப்போய் விடலாம் என்று எண்ணி, அவன் கடிதமே போடாமல் இருந்துவிட்டான்!

* * *

வெளியே ஜல் ஜல் என்ற சப்தத்துடன் வில்வண்டி வந்து நிற்கும் சப்தம் கேட்டது.

ராஜசேகரன் எழுந்துபோய் ஜன்னல் வழியாக வண்டியிலிருந்து இறங்கும் அந்தப் பெண்ணைப் பார்க்கலாமா என்று நினைத்தான். ஆனால், அதை அடக்கிக்கொண்டு பேசாமல் இருந்தான்.

ஊரிலிருந்து வந்தவர்கள் வீட்டிற்குள் நுழைந்தார்கள். பேச்சுக் குரலும் சிரிப்பொலியும் எழும்பின. ஆனால் அவன் அவற்றைக் காதில் வாங்கிக் கொள்ளவில்லை.

அவன் கண்களை மூடிக் கொண்டே யோசனை செய்து கொண்டிருந்தான்.

சிறிது நேரம் சென்றது.

படாரென்று அறைக் கதவுகளைத் திறந்துகொண்டு அவனுடைய தம்பி கோபு விழுந்தடித்துக்கொண்டு, "அண்ணா! அண்ணா!" என்று அவனை நோக்கி ஓடிவந்தான்.

"என்னடா அது?" என்று அலறிக்கொண்டு எழுந்தான் சேகரன்.

"இதோ இந்த ரிப்பனை வச்சுக்கோ! ஊரிலேருந்து ஒரு

"சார், உங்களுக்கு என்ன வேணும்?"

"மூணு அவுன்ஸ் தோசை, இரண்டுஅவுன்ஸ் இட்டிலி, இரண்டு அவுன்ஸ் சாம்பார் கொண்டுவா!"

அக்கா வந்திருக்குதே, அது வந்து கேட்டால் கொடுக்காதே!" என்று சொல்லி, பின்னலிலிருந்து இழுத்துக் கொண்டு வந்த ஒரு ரிப்பன் முடிச்சைக் கொடுத்தான் அவன்.

"டேய், போக்கிரி! ரிப்பனைக் கொண்டாடா!" என்று கேட்டபடி பின்னலைப் பிடித்துக் கொண்டு அறைக்குள் நுழைந்த ஒரு நங்கை, "ஆஹா!" என்றபடியே ஆச்சரியப்பட்டு நின்று விட்டாள்!

ராஜசேகரனுக்கு 'ஷாக்' அடித்ததுபோல் இருந்தது! கையிலிருந்த ரிப்பன் முடிச்சையும், எதிரே வாயில் விரலை வைத்துக்கொண்டு நின்ற வசந்தாவையும் அவன் மாறிமாறிப் பார்த்தான்!

மனிதன்

புதுமைச்சித்தன்

எழுத்தாளர் பரமசிவம் ஒரு பத்திரிகை நடத்த வேண்டுமென்று ஆசைப்பட்டார். அவர் ஆசைப்பட்டால் நடத்தியேதான் தீருவார். குன்றாத முயற்சி குறையாத ஊக்கம் அவரிடம் குடிகொண்டிருந்தது!

"என்ன பத்திரிகை நடத்துவது? எப்படிப் பத்திரிகை நடத்துவது?"-அவர் மூளை ஓயாது வேலைசெய்ய ஆரம்பித்தது.

"நல்லதாக ஒரு இலக்கிய மறுமலர்ச்சிப் பத்திரிகை நடத்தினால் என்ன?"

"இலக்கியமா? அப்படியென்ற ஒன்று இன்னும் உயிரோடு இருக்கிறதா, என்ன? நம்நாட்டு எழுத்தாளர்கள்தான் பேனாப் பிடித்தவனெல்லாம் பெர்னாட்ஷா என்ற எண்ண வெறியில் அதைக் குத்திக் கொன்று எப்பொழுதோ மயானத்திற்கு அனுப்பி விட்டார்களே!...ஹஹ்ஹ...ஹஹ்ஹ... ஹா". இந்த எண்ணங்கள் அவர் மனதில் மலர்ந்தவுடன் வெற்றி கண்ட வீரனைப்போல் சிரித்துக் கொண்டார்.

சிந்தனையாளன் சிறுமையைக் கண்டு சிரிக்கத்தானே செய்கிறான்!

"இலக்கியப் பத்திரிகை வேண்டாம். அப்படியானால்...?,

"ஆ! ஒரு யோசனை!"

"உண்மைக் கதைகள்; நிஜப் புகைப் படங்கள், இந்த லேபிளோடு ஒரு பத்திரிகை ஆரம்பித்தால் என்ன? இவைகளுக்குத்தானே இப்பொழுது பத்திரிகைச் சந்தையில் நல்ல செல்வாக்கு!"

"பாதி இரவுக் கதைகள், பச்சை உண்மைகள், சாக்கடைப் பரிசோதனையல்ல. சமுதாயத்தின் இழிந்த தன்மைகள், என்று பிரமாதப் படுத்தி விட்டால் போகிறது! இதுதான் விளம்பர யுகமாயிற்றே! விளம்பரம் எப்பேர்ப்பட்டவன் மனதையும் மயக்கிவிடும்."

"சீச்சீ! எவ்வளவு கேவலமான யோசனை! உண்மைக் கதையாம், நிஜப் புகைப்படமாம்! இதைவிடத் தேவடியாத் தொழில் எவ்வளவோ மேலானது!"

எழுத்தாளர் பரமசிவத்தின் மூளையின் இயக்கம் ஓயவில்லை.

தறிகெட்ட மூளையின் ஓட்டம்! எண்ணச் சிக்கல்!

எழுத்தாளர் பரமசிவம் காப்பி குடித்தார். புகையிலை போட்டுக்கொண்டார். கூஜாத் தண்ணீர் குடித்தார். ஒரு சிட்டிகைப் பொடியை உறிஞ்சினார். என்னதான் செயற்கை ஊக்கம் ஊட்டினாலும் சிந்தனையென்ன யந்திரமா, விசை முடுக்கி விட்டவுடன் ஓட, இயங்க?

கொட்டாவி விட்டார். சொடுக்கு விட்டுக் கொண்டார். சோம்பல் முறித்தார். காதைக் குடைந்து கொண்டார்.

எண்ணத்தில் சற்றுத்தெளிவு!

"ஆ! இன்னொரு அபாரமான ஐடியா. குங்குமம்—மஞ்சள்—கோலாட்டம், இந்தமாதிரிப் பெயரில் ஒரு பெண்கள் பத்திரிகை ஆரம்பித்தால்......! பலே ஜோர்!"

"புடவை கட்டிக்கொள்வது எப்படி? நகை போட்டுக்கொள்வது நல்லதா? சௌரி மயிர் சௌந்தரியமா? பெண்களுக்கு அவசியம் கரண்டியா, கணவனா? கடுகு ஹல்வா! பெருங்காயப் பாயசம்! கண்ணாடி பஜ்ஜி! களிமண் ஜொஜ்ஜி! இத்யாதி விஷயங்களைப்பற்றி எழுதத் தெரிந்திருக்க வேண்டும். நமக்குத்தான் ஒரு இழவும் தெரியாதே!"

"ஆசிரியர் பரமசிவம், ஆசிரியை பரமசிவியாக மாறினல் தான்! அது இந்த ஜென்மத்தில் ஏது? ஊஹூம்!...... இதுவும் மோசமான ஐடியா தான்"

அவர் மனம் இந்த யோசனையையும் உதறித் தள்ளிவிட்டது.

"உம்......... அப்புறம்......?"

ஏதோ யோசனை! கையிலிருந்த பேனாவை இலேசாகக் கடித்துக் கொண்டிருந்தார்.

"இதுதான் சரியான யோசனை! குழந்தைகளுக்கென்று ஒரு பத்திரிகை ஆரம்பித்து நடத்த வேண்டியது ...... பாலர் மலர்!"

"ஊஹூம்! நோ... நோ... இதில் கூடச் சுவாரஸ்யமில்லை... குழந்தைப் பத்திரிகையாவது!... மண்ணாங்கட்டியாவது!.. சும்மா வீணத்தனம்!"

"குழந்தைப் பத்திரிகை நடத்துகின்றான்களாம். இனிமேல், கிழவன்களுக்கென்று எவனாவது பத்திரிகை நடத்தினல் ரொம்பவும் நல்லாயிருக்கும்... முட்டாள் பயல்கள்!..." அர்த்த புஷ்டியான ஏளனச் சொற்களை வாரி இறைத்தது அவர் மனம். அந்த ஏளனத்தைத் தொடர்ந்து பிறந்தது மற்றொரு எண்ணம்.

"மற்ற எல்லாவற்றையும்விட, இது நல்ல யோசனை தான்! தொழிலாளர்க்கென்று ஒரு பத்திரிகையை ஆரம்பித்து ஜமாய்த்துவிடுவது!..."

"சீச்சீ! இதுகூட உருப்படாது! தொழிலாளர்கள் வறுமையின் பிரதிபிம்பமான நடைப்பிணங்கள்.

"அந்த நடைப் பிணங்களுக்குப் பத்திரிகை படித்து உணர்ச்சி பெறவேண்டும் என்ற உணர்ச்சியே இருக்காது. அந்தப் பத்திரிகையை நாமே அச்சிட்டு, நாமே வெளியிட்டு, நாமே தான் படித்துக் கொள்ள வேண்டும்!

ஆமாம்... அதை விட அவமானம் ...ஹா....ஹா... ஹா...... வேறு கிடையாது!...”

அவர் மனம் சிரித்தது.

இன்றையப் பத்திரிகை உலகத்தின் இழிந்த தன்மை அவருக்குக் கோபமூட்டியது. அந்தக் கோபத்தில் அவர் எதிரில் இருந்த இரண்டொரு பத்திரிகைகள் கூட, தங்கள் உருச் சிதைந்து குப்பைக் கூடைக்குள் குடி புகுந்தன.

கோபம்! அத்துடன் அவருக்கு வருத்தமும்கூட! எங்கேதான் எழுத்தாளர் பரமசிவம் என்பதிலிருந்து ஆசிரியர் பரமசிவமாகப் பரிணமிக்க முடியாமல் போய்விடுகிறதோ என்று!

வெற்றிலைப் பெட்டியை அருகில் இழுத்தார். சிறிது நேரம் சென்றது! மறுபடியும் காப்பி. நெற்றியில் கைகளை வைத்துக் கொண்டார். கண்களை மூடிக் கொண்டார். ஆடாத சிலையானார்.

சிந்தனை எங்கெங்கோ ஓடிற்று!

“ஒன்றும் தெரியாத பயல்கள் எல்லாம் கையில் காசை வைத்துக்கொண்டு பத்திரிகை உலகத்தை ஆட்டிப்படைக்கிறான்கள்...

“பெண்களுக்குப் பத்திரிகைகள்... குழந்தைகளுக்குப் பத்திரிகைகள்... தொழிலாளருக்குப் பத்திரிகைகள்... உண்மைக் கதைகளுக்கு— நிஜப் புகைப் படத்திற்குபத்திரிகைகள்..காதலுக்கு, சினிமாவிற்குப் பத்திரிகைகள்... என்னடா அக்ரமம்? பத்திரிகை உலகமா? காசு பறிக்கும் சந்தைக்கூட்டம்!...” தறிகெட்டு ஓடிற்று சிந்தனை.

எழுத்தாளர் பரமசிவம் கண் விழித்தார்!

ஒரு பிரமாதமான எண்ணம் பிறந்தது. அபார, அபாரமான யோசனை உதித்தது. அந்த எண்ணத்தின் சிறப்பை — உயர்வை, அப்படியே கூற வார்த்தைகள் கிடையாது.

எழுத்தாளர் பரமசிவத்தின் முகத்தில் ஒரு வெறிச் சிரிப்பு! கம்பீரப் புன்னகை!

இந்த யோசனை தான் சரி! பத்திரிகை உலகில் ஒரு புரட்சி! புதுமை!

“பெண்களுக்கு, குழந்தைகளுக்கு, தொழிலாளர்களுக்கு மாணவர்களுக்கு, காதலுக்கு, உண்மைக் கதைகளுக்குப் பத்திரிகைகள்! ஆனால், மனிதர்களுக்கென்று இன்னும் எவனும் பத்திரிகை ஆரம்பித்து நடத்தவில்லை! நாம் நடத்தினால்....? பலே!பிரமாதம்!... அபாரம்!... அற்புதம்!...”

மனிதர்களுக்கென்று ஆரம்பித்து நடத்தப்போகும் பத்திரிகையின் வெற்றியைப் பற்றிய

கனவுகளில் தாவியது எழுத்தாளர் பரமசிவத்தின் மனம்.

* * *

சில நாட்கள் சென்றன!

"பத்திரிகை உலகில் ஒரு புதுமை! புரட்சி! எந்தச் சிந்தனையாளனும் இதுவரை சாதிக்காத அற்புதச் சாதனை! மனிதர்களுக்குப் பத்திரிகை!" எங்கு பார்த்தாலும் பிரமாண்டமான விளம்பரம், பிரமிப்பை ஊட்டும் விளம்பரம்!

பரமசிவம் பூரித்துப் போனார்!

"ஆஹா!...அற்புத சாதனை" என்று தம்மைத்தாமே பாராட்டிக்கொண்டார். ஒரு நல்ல காரியம் செய்பவனைப் பாராட்டுபவர்கள்தான், இந்த நன்றி கெட்ட தமிழ்நாட்டில் கிடையாதே!

பத்திரிகைக்குப் பெயர் வைக்கவேண்டும். பரமசிவம் யோசித்தார். பல கப் காப்பி அருந்தலுக்குப்பின் பலமாக யோசித்தார்!

நல்லதொரு பெயரைத் தேட அவர் அவ்வளவாக மூளையை அலட்டிக் கொள்ளவில்லை. பெயர் உடனே அகப்பட்டு விட்டது!

பத்திரிகையின் பெயர் "மனிதன்"

"மனிதன் அழகான பெயர் நோ...நோ..... இல்லை! மனிதன் பொருத்தமான பெயர்! பொருள் நிறைந்த பெயர்... ஆமாம்..."

"உம்—மனிதன் எந்தப் பாதையில் செல்வான்?"

"பத்திரிகை யென்றால் சில இலட்சியங்கள் — கொள்கைகள் இருக்கவேண்டுமே! இப்பொழுது பத்திரிகைகள் நடத்துகின்றவன்கள் இதையெல்லாம் எங்கே கவனிக்கின்றான்கள்? அவன்கள் இலட்சியம்— கொள்கை குறியெல்லாம் ஒன்றே ஒன்றுதான். அதுதான் பணம்! சவப்பயல்கள் எப்படியாவது தொலையட்டும்!...ம்... மனிதன் எந்தப் பாதையில் செல்வான்?..."

"வள்ளுவனின் குறள் பாதையிலா?...... வடலூராரின் ஒளிப் பாதையிலா?......புத்தனின் கருணைப் பாதையிலா?... புனித காந்தியின் அன்புப் பாதையிலா?...ஊஹூம்...இவர்கள் பாதை கடினமானது. மேலும் இவர்கள் மகான்கள். மனிதன், மனிதப் பாதையிலேயே செல்லட்டும்!..."

"ஷேக்ஸ்பியரின் பாதையிலே!....ஷெல்லியின் பாதையிலே!... மில்டனின் பாதையிலே!..டென்னிஸன்னின் பாதையிலே! ... கீட்ஸ் ... லாங்பெலோ ... ... கௌப்பர்...பெர்னார்ட்ஷா ... ...

அவன்கள்...... இவன்கள், பாதையிலே!... சீச்சீ!... இவன்கள் எல்லாம் மேல் நாட்டானுங்க. நமது "மனிதன்" அப்பட்டமான, சுத்த சுயமான சுதேசிஆசாமி."

"இலக்கியமன்னன் புதுமைப்பித்தன் இருக்கும்போது ஷேக்ஸ்பியரும், ஷெல்லியும் எதற்கு?"

"மனிதன்புதுமைப்பித்தன் காட்டிய பாதையில் செல்வான். அந்தப் பாதை, தகதகக்கும் தங்கப் பாதை...ஒளி வீசும் வைரப்பாதை...மாசற்ற மரகதப் பாதை...ஆஹா!...... சபாஷ்...அதுதான் சரி!..."

"மனிதன், எழுத்தாளர்களுக்குத் தாராளமாகச் சன்மானம் அளிப்பான். அந்தச் சன்மானம் பத்திரிகையின் ஒரு பிரதியாக நிச்சயம் இருக்காது. பணமாகவே இருக்கும்"

பத்திரிகையை வெளிக்கொணர ஆகவேண்டியவற்றை விரைந்து செய்தார். ஏட்டளவில் நில்லாது நடைமுறைக்கான கொள்கைகள் தீட்டப்பட்டு விட்டன.

எழுத்தாளர் பரமசிவம் ஆசிரியர் பரமசிவமாக மாறிவிட்டார். ஆசிரியத்தனம் அவரிடம் பூரணமாகக் குடியேறியது.

"ஓய், நம்ம கடம் கஸ்தூரி அய்யங்கார் சொந்தமா ஒரு சட்டி பானைக் கடை வைச்சிருக்காராமே!"

எல்லா வேலைகளும் முடிந்துவிட்டன. இனி குறிப்பிட்ட தேதியில் "மனிதன்" பிறக்க வேண்டியதுதான் பாக்கி!

ஃ ஃ ஃ

குறிப்பிட்ட தேதியில்...... மனிதன் பிறந்தே விட்டான். குறைப் பிரசவமாக இல்லாமல் நிறை வளர்ச்சியுடன் பூரணத்துவம் பெற்றே பிறந்தான்.

அழகான வடிவம்! அறிவுச் செய்திகள்! மனிதன் பத்திரிகை சிறந்த பிறவி!

எங்கும் மனிதன் நடமாடினான்!

கடற்கரையில்—காப்பி ஹோட்டல்களில் — பஸ் ஸ்டாண்டில்—பார்க்கில் — வெற்றிலை பாக்குக் கடையில்—வீதியில்—மூலை முடுக்கில்— முச்சந்தில்—சந்து பொந்தில்—இண்டு இடுக்கில்—; எங்கும் மனிதன்! காணும் இடமெல்லாம் மனிதன் பத்திரிகை கண்ணில் பட்டது.

ஆசிரியர் பரமசிவம், தம் இலட்சிய ஏணியின் முதற்படியில் ஏறி நின்றார்.

"இலட்சியம் நீண்டது. இறப்பு நம் உயிரை அபகரிப்பதற்குள்

அதைச் சாதித்துவிட வேண்டும்.

ஆமாம்... ஆமாம்... காலம் குறுகியது... கலையும் இலக்கியமும் பெரியன..."

ஆசிரியர் பரமசிவத்திற்கு எல்லையற்ற மகிழ்வு பெருமை! முதல் இதழ் "மனிதன்" சுப சூசகங்களோடு தோன்றிவிட்டான். அவர் படைப்பு அற்புதமானது. அவர் மனதில், முதன் முறையாகக் குழந்தை ஒன்றைப் பெற்றெடுத்த தாயின் பெருமிதம்! சிருஷ்டியின் பூரிப்பு! நிகரற்ற இன்பம்!

உண்மைக்கும் உழைப்பிற்கும் இந்தப் பொல்லாத உலகம் என்றுமே மதிப்பு அளிப்பதில்லை! இது அனுபவ உண்மை!

மனிதன் இதழ் விற்பனையே இல்லை! ஒரே 'டல்'. எதிர்பாராத மந்தம்!

'மனிதன்' முதல்இதழிலேயே மூர்ச்சித்து விழுந்துவிட்டது. அவ்வளவுதான்! அதற்குப் பின் பரலோக யாத்திரைதான்!

மனிதன் பத்திரிகை இறந்து விட்டது. காரணம்......? தம்மைத்தாமே கேட்டுக்கொண்டார்.

அவருக்குக் கிடைத்த பதில்:

"மனிதர்கள் என்று யாராவது இருந்தால் அல்லவா, 'மனிதன்' பத்திரிகையை வாங்கிப்படிக்க! எங்கும் மனித மிருகங்கள்! மனித யந்திரங்கள்!"

சென்னை நண்பர்கள்

சென்னை நண்பர்களின் வசதிக்காக எங்கள் அலுவலகத்தில் "புத்தக விற்பனைப் பிரிவு" ஒன்று தொடங்கியிருக்கிறோம்.

*

தமிழ்ப்புத்தகங்கள் அனைத்தும் எங்களிடம் கிடைக்கும்.

*

அலுவல் நேரம்:
காலை 9 மணி முதல்
மாலை 6 மணி வரை

*

பொன்னி அலுவலகம்
16, சேணி அம்மன்
கோவில் தெரு,
தண்டையார்ப்பேட்டை
சென்னை-21


ஐயா, ஐயா, என்னை விட்டுடுங்கையா சேசே என்னாங்க இது
சேசே, என்னு ஆளுங்கப்பா இவங்க... சுத்த காட்டு ஆளுங்க,... கொஞ்சமாவது நாகரிகம் கிடையாது... சட்...
ரெஸ்பாக்

சர்க்கஸ் ரங்கு

2

டி. ஜே. இன்பராஜ்

அன்று ரங்குவின் அம்மா கிணற்றில் தண்ணீர் இறைத்துக் கொண்டிருந்தாள். ரங்கு அடுப்பருகில் உட்கார்ந்து வடை சுட்டுக்கொண்டிருந்தான். அவனுடைய கவனம் அங்கு இல்லை. எதையோ யோசித்துக்கொண்டிருந்தான். அந்த ஞாபகத்தில் அவன் மாவுப் பாத்திரத்தில் கையை விடுவதற்குப் பதிலாக, கொதிக்கும் எண்ணெயுடன் அடுப்பிலிருந்த பொறிக்கும் சட்டியில் கையை வைத்துவிட்டான்.

“அம்மா!” என்ற சப்தத்தைக் கேட்டு அவனுடைய அம்மா பரபரப்புடன் ஓடிவந்தாள். அவனுடைய கையைப் பார்த்தவுடன் அவள் “ஆ” வென்று அலறிவிட்டாள். உடனே வைத்தியர் வீட்டிற்கு ஓடினாள்.

வைத்தியர் ரங்குவின் கைக்கு மருந்து வைத்துக் கட்டினார். கொதிக்கும் எண்ணெயில் கைவைத்து விட்டதால் அவன் கை வெந்துவிட்டது. அவன் அழவில்லை. அழுதால் அம்மாவுக்கு மனக்கவலை உண்டாகுமென்று அவன் நினைத்தான். பல்லைக் கடித்துக்கொண்டு வலியைச் சகித்தான்.

வைத்தியர் தினமும் ரங்குவின் வீட்டிற்கு வந்து அவன் காயத்திற்கு மருந்து கட்டிச் சென்றார். கையில் புண் உண்டான நாளிலிருந்து அவன் வீட்டைவிட்டு வெளியேசெல்லுவதில்லை. அவன் அம்மா வடைகளைச் சுட்டு, அவைகளை விற்கப் பட்டணத்திற்குப் போவாள்.

முன்பு ரங்கு உல்லாசமாகப் பாட்டுப்பாடி வடை விற்றான். சிறுவர்கள் சந்தோஷத்துடன் அவனிடம் வடை வாங்கினார்கள். அவன் அம்மாவோ பாட்டுப் பாடவில்லை. மற்ற அங்காடிக்காரிகளைப் போல்தான் அவள் பலகாரம் விற்றாள். அவளால் அதிகமாக விற்க முடியவில்லை.

ரங்குவின் கைப் புண் கொஞ்சம் கொஞ்சமாக ஆறி வந்தது. அவன் தினமும், "அம்மா, எனக்குக் கை வலிக்கவில்லை பட்டணத்திற்குப் போய் வடை விற்கிறேன்" என்று சொல்ல ஆரம்பித்தான். அவன் அம்மா அப்பொழுது "அவசரப் படாதேடா ரங்கு, புண் ஆறியதும் உன்னையே அனுப்புகிறேன். கொஞ்சம் பொறுமையாய் இரு" என்று சொல்லுவாள்.

இரண்டு மாதங்கள் ஓடின. ரங்குவின் கைப்புண் முற்றிலும் குணமாகி விட்டது. ரங்கு சந்தோஷத்துடன் குதிக்க ஆரம்பித்தான். "நாளைக்கு நான் தான் வடை கொண்டுபோவேன். அப்புறம் தடுக்கக்கூடாது" என்று அவன் அம்மாவிடம் முதல் நாளே சொல்லிவைத்துவிட்டான். அவள் சந்தோஷத்துடன் "சரி" என்றாள்.

ரங்கு காலையில் எழுந்தான். குளித்துவிட்டுச் சாப்பிட்டான். வடைத் தட்டைத் தலையில் வைத்துக்கொண்டு நடந்தான். ஒரு மணி நேரத்தில் பட்டணத்திற்கு வந்துவிட்டான்.

"வடை; உளுந்த வடை
வெல்லம் சேர்ந்த வடை
கடையில் கிடைக்காத வடை
காசுக்குக் கிடைக்கும் இங்கே"

அவன் பாடிக்கொண்டே நடந்தான். சிறுவர்கள் கூட்டமாக அவனுக்குப் பின்னால் சென்றனர். இடையிடையே வடை விற்றான். தட்டில் கொஞ்சம் வடைகள் தான் இருந்தன.

அவன் பள்ளிக்கூடத்திற்கு முன்னால் வருவதற்கும், பிள்ளைகள் பள்ளிக்கூடம் முடிந்து வெளியே வருவதற்கும் சரியாக இருந்தது. ரங்குவைக் கண்டவுடன் அவன் சிநேகிதர்கள் உற்சாகத்துடன் சத்தமிட்டார்கள்.

"ஏண்டா ரங்கு, இரண்டு மாதமாக உன்னைக் காணோம்?"

"ஏண்டா இப்பொழுது வடை விற்கவருவதில்லை?"

"கையிலே என்னடா பெரிய தழும்பு?"

ஒவ்வொருவரும் கேள்விமேல் கேள்வி போட்டு ரங்குவைத் திணற வைத்தனர். ரங்கு பொறுமையுடன் எல்லோருக்கும் பதில் சொன்னான்.

ரங்கு தட்டிலிருந்த வடைகளை ஒரு நொடியில் விற்றுவிட்டான். அவன் அம்மா கடையில் சில சாமான்கள் வாங்கி வரும்படி சொல்லியிருந்தாள். அவன் கடைத் தெருவை நோக்கி நடந்தான்.

"பாம், பாம்" என்று பாண்டு வாத்தியம் முழங்கியது. ஒரே மாதிரியான உடை அணிந்தவர்கள் பாண்டு வாசித்துக்கொண்டு முன்னால் நடந்தனர். அவர்களுக்குப் பின்னால் நன்றாக அலங்கரிக்கப்பட்ட குதிரைகள் வந்துகொண்டிருந்தன. ஒவ்வொரு குதிரையின் மேலும் ஒவ்வொரு சிறுவன் உட்கார்ந்திருந்தான். குதிரைகளுக்குப் பின்னால் ஆறு யானைகளும் மூன்று ஒட்டகங்களும் வந்தன.

சாமான்கள் வாங்கக் கடை வீதிக்குச் சென்ற ரங்கு, ஆச்சரியத்துடன் அவைகளைப் பார்த்தான். "கோபால் சர்க்கஸ்" என்று எழுதப்பட்ட போர்டுகளைத் தூக்கிக்கொண்டு சிலர் வந்தனர். அவர்களில் ஒருவன் ரங்குவின் கையில் ஒரு நோட்டீஸைக் கொடுத்துவிட்டுச் சென்றான். ரங்கு அதைப் படித்தான்.

கோபால் சர்க்கஸ்

இரு மாதங்களாகக் காந்தி மைதானத்தில் நடைபெறுகிறது.

தினமும் இரண்டு காட்சிகள்

முதல் காட்சி 7 மணி இரண்டாவது காட்சி 10 மணி

அதிசயப்பார்விளையாட்டுகள், காட்டுமிருகங்களின் வேடிக்கைகள் உடல் குலுங்கச் சிரிக்கவைக்கும் காமிக்குகள் நடைபெறும்.

டிக்கட் விபரம்:- ரூ 2, 1—8—0, 1—0—0, 0—8—0.

N. B:- காட்டு மிருகங்களைத் தனியே பார்க்க சார்ஜ் 0-1-0

"அடடே, இரண்டு மாதமாகவா இந்தச் சர்க்கஸ் நடக்கிறது! எனக்குத் தெரியாதே... ஆமாம், நான் இரண்டு மாதமாகப் பட்டணத்திற்கே வரவில்லையே. சரி, சர்க்கஸ் கூடாரத்தையாவது போய்ப் பார்ப்போம்" என்று ரங்கு தனக்குள் சொல்லிக்கொண்டான்.

அவன் கடைவீதியிலிருந்து ஜோகக் காந்தி மைதானத்திற்குச் சென்றான். ஒரு பிரமாண்டமான கூடாரம் மைதானத்தில் போடப் பட்டிருந்தது. ரங்கு அதற்குள் சென்று பார்த்தான். பலவிதமான பார்கள் மேலே தொங்கின. சர்க்கஸில் உபயோகிக்கப்படும் பல சாமான்கள் ஆங்காங்கே இருந்தன.

அவன் சர்க்கஸ் கூடாரத்தைவிட்டு வெளியே வந்தான். பின் புறம் ஒரு சிறிய கூடாரம் போடப்பட்டிருந்தது. ரங்கு அங்கே சென்றான். கூடாரத்திற்கு முன் ஒருவன் நாற்காலியில் உட்கார்ந் திருந்தான். "ஒரு அணா கொடுத்துவிட்டு அதிசயமான காட்டு மிரு கங்களைப் பாருங்கள்" என்று அவன் சொல்லிக் கொண்டிருந்தான்.

கூடாரத்திற்குள் சிங்கம், புலி இவைகளின் உறுமல் சப்தம் கேட்டது. பல குரல்கள் கீச்சிடும் சப்தமும் கேட்டது. அவைகளைக் கேட்டு ரங்கு சந்தோஷப்பட்டான். உள்ளே சென்று அந்த மிருகங் களைப் பார்க்க நினைத்தான். அதற்கு ஒரு அணா கொடுக்கவேண்டுமே?

ஒரு அணா பிறருக்குச் சாதாரணமாகத் தோன்றினாலும், அவ னுக்கு அது ஆஸ்தியைப்போலிருந்தது. வடை விற்றுக் கிடைத்த லாபத்தின் ஒரு பகுதி அது. அந்த ஒரு அணாவைச் செலவு செய்து விட்டால் இரவுச் சாப்பாட்டிற்கு வழியிருக்காது.

ரங்கு மெதுவாக அந்தக் கூடாரத்தைச் சுற்றி வந்தான். ஒரு பக்கத்தில் டோரா துணியில் துவாரமிருந்தது. அதன் வழியாக மிரு கங்களைப் பார்க்க நினைத்து டோராவிற்கு அருகில் சென்றான். அந்தப் பக்கமாக வந்த காவற்காரன் "யாரடா அங்கே நிற்பது?" என்று அதட்டினான். அவனுடைய முறுக்கிவிட்ட மீசையையும், கையிலி ருந்த குண்டாந்தடியையும் பார்த்த ரங்கு, அங்கிருந்து ஓட்டம் பிடித்தான்.

(தொடரும்)

பொன்னி

சந்தா விவரம்

	ஒரு ஆண்டு	ஆறுமாதம்
இந்தியா, இலங்கை	ரூ. 6-0-0	ரூ. 3-0-0
பர்மா, மலேயா, முதலிய வெளிநாடுகள்	ரூ. 6-12-0	ரூ. 3-6-0

சந்தாத் தொகை முன்பணமாகவே செலுத்தப்பட வேண்டும். இலங்கை நண்பர்கள் வி. பி. பி. மூலம் தபால் செலவுடன் தொகை செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

பொறுப்பாளர்.

காலியான இடம்

வீர. பழனியப்பன்

கீழ்க்கட்டிற்கு ஒரு குடும்பம் புதிதாகக் குடிவந்திருந்தது. அந்தக் குடும்பத்தைச் சேர்ந்த பெண் குழந்தை மாடியின்மீது ஏறிவந்தது. அந்தக் குழந்தையைக் கண்டதும் லலிதா, ஆவலுடன் அதன் அருகில் சென்ருள். குறுகுறுவென்ற பார்வையும், மாந்தளிர் மேனியும், மாருத சிரிப்பும் கொண்ட அந்தக் குழந்தையிடம் பேசுவதற்கு அவள் ஆவல் கொண்டாள்.

"உம் பேரு என்ன பாப்பா?" என்று மெதுவாகப் பேச ஆரம்பித்தாள்.

"எம் பேரா, ஊஹூம்...... நான் சொல்லமாட்டேன்."

"உம் பேரைச் சொன்ன மிட்டாய் தருவேன்"

"நீ பொய் சொல்றே. எங்கே முட்டாயேக் காட்டு பாப்போம்" குழந்தைக்கு அவள் சொல்லில் நம்பிக்கை ஏற்படவில்லை. லலிதா ஒரு பொட்டலத்தில் மிட்டாய் கொண்டுவந்து காட்டினள். குழந்தையின் கண்கள் அந்த மிட்டாய்ப் பொட்டலத்தில் பதிந்தன.

"எம் பேரைச் சொன்ன நெசமா முட்டாய் தருவியா?"

"கண்டிப்பாத் தர்ரேன். உம் பேரு என்ன சொல்லு?"

"என்னே எங்க பாட்டி 'லெச்சுமு'ன்னு கூப்புடுவாங்க. எங்க அப்பா 'பேபி'ம் பாங்க. எம் பேரைத்தான் சொல்லிட்டேனே, முட்டாயேக் குடு."

லலிதாவின் கையிலிருந்து ஒரு மிட்டாய் பேபியின் கைக்கு மாறியது.

குழந்தை மிட்டாயை ருசி பார்க்க ஆரம்பித்தது.

"சரி...உங்கப்பா பேரைச் சொல்லு. இன்னொரு மிட்டாய் தர்ரேன்."

"அப்பா பேரா...இ......ம். அப்பாதான்."

லலிதாவுக்குச் சிரிப்பு வந்தது.

"நீ கூப்பிடுற பேரைக் கேக்கல்லே பேபி. உங்க பாட்டி உங்கப்பாவை எப்படிக் கூப்புடுவாங்க, அதைச் சொல்லு பேபி?"

"பாட்டி அப்பாவை 'ராஜு'ன்னு கூப்பிடுவாங்க. எங்கே இன்னொரு முட்டாயி?"

உழைத்தவன் உரிமையைக் கேட்கும்போது காட்டும் உறுதி குழந்தையின் குரலில் தொனித்தது. மற்ருெரு மிட்டாயும் கை மாறியது.

"ஏன் பேபி உங்கம்மாவை வீட்டிலேயே காணுமே. அவுங்க எங்கே?"

குழந்தையின் சிறு கண்களில் ஏதோ ஒரு ஏக்கம் தோன்றியது.

"ஊருக்குப் போயிருக்காங்க."

"உன்னை உட்டுட்டா போயி ருக்காங்க. எந்த ஊருக்குப் போயிருக்காங்க பேபி?"

"ஆமாம். என்னை உட்டுட் டுத்தான் போயிருக்காங்க. அன்னிக்கி அம்மாவுக்குக் காச்ச லாய் இருந்துச்சு. டாக்டர் வந்து பாத்தாரு. அப்புறம் அப்பா எல்லாம் அழுதுக்கிட்டு அம்மாவெத் தூக்கிக்கிட்டுப் போனுங்க. அப்பா திரும்பி வந்தவுடனே அம்மா எங் கேன்னு கேட்டேன். ஊருக்குப் போயிருக்கு வளதுடும்ணுரு. அம்மா அன்னிக்கிப் போனது தான். இன்னும் வால்லே" என்றுசொல்லிக்கொண்டு வரும் பொழுதே, குழந்தையின் குரல் கம்மியது.

லலிதாவும் பேபியும் இப்ப டிப் பேசிக்கொண்டு இருக்கும் போது, உள்ளே யிருந்து, "ஏண்டி லலிதா, ஒனக்கு மூளை இருக்கா? இந்தக் குழந்தை கிட்டே இதெல்லாமா கேட் கிறது?" என்று கேட்டுக் கொண்டு லலிதாவின் தாயார் வந்தாள்.

லலிதா தன் கையில் மீதி யிருந்த மிட்டாயையெல்லாம் குழந்தையிடம் கொடுத்துவிட்டு, அதை அணைத்து முத்தமிட் டாள்.

"நீங்க ரொம்ப நல்ல அம் மாவா இருக்கீங்களே" என்று பேபி, லலிதாவுக்குச் 'சர்டி பிகேட்' வழங்கியது.

"அடி சமத்தே" என்று லலிதாவின் தாயார் குழந்தை யின் கன்னத்தைத் தடவி நெட்டி முறித்துத் திருஷ்டி போக்கினுள்.

வெளியில் 'டிரிங்' 'டிரிங்' என்று சைக்கிள் மணி அடிக் கும் சப்தம் கேட்டது. அதைத் தொடர்ந்து, "பேபி, பேபி" என்ற குரலும் வந்தது.

லலிதா கையிலிருந்த பேபி, "அப்பா கூப்புடுருங்க, நான் போய்ட்டு அப்புறமா வர்ரேன். இன்னும் நெறையா முட்டாய் குடுக்கிறியா?" என்று சொல்லி மாடிப்படி வழியாகக் கீழே இறங்கிச் சென்றது.

குழந்தை போவதைப் பார்த்து ரசித்துக்கொண்டிருந்த லலிதா தன் தாயைப் பார்த்து, "இந்தக் கொழந்தைக்கு அம்மா இல்லையா?" என்று கேட்டாள்.

"அதையேன் கேக்கிறே. பாவம். நாலு வயசுக்குள்ளே தாயை இழந்துட்டுப் பாட்டிக் கிட்டேயும் அப்பா கிட்டே யுமா வளருது" என்று பதில் அளித்தாள்.

இதைக் கேட்ட லலிதா, "தாயில்லாக் குழந்தையா இது. பாவம்...நல்ல குழந்தை" என்று பெருமூச்செறிந்தாள்.

அந்தப் பெருமூச்சு பரிவு, பரிதாபத்தின் பிரதிபலிப்பாக வெளிவந்ததுபோலும்!

2

"ஏன் பேபி, மேலே என் னம்மா செஞ்சுண்டு இருந்தே?"

"அங்கேப்பா ஒரு அம்மா இருந்துச்சு. அதுகிட்டே பேசிக்கிட்டு இருந்தேம்பா"

"அந்தம்மாக்கிட்டே என்ன பேசிக்கிட்டு இருந்தே பேபி."

ராஜு லேசாகச் சிரித்தான்.

"அதைச் சொன்னு நீயும் முட்டாயி வாங்கித் தருவியா அப்பா?"

"அந்தம்மா உனக்கு முட்டாயி தந்துச்சா?"

"ஆமாம்ப்பா. அந்த அம்மா நெறையா முட்டாயி தந்துச்சு'' என்று சொல்லித் தான் வாங்கிய மிட்டாயின் அளவைக் கையை விரித்துப் பாவனை காட்டித் தெரிவித்தது.

"இம்...ம். மிட்டாயெ வாங்கிட்டு நீ என்ன சொன்னே பேபி?"

"என் பேரு...உங்க பேரு எல்லாம் சொன்னேன். அம்மா எங்கேன்னு கேட்டுச்சு. நான் ஊருக்குப் போயிருக்குன்னு சொன்னேம்ப்பா."

குழந்தையின் வார்த்தைகளைக் கேட்டதும் ராஜு பெருமூச்செறிந்தான். அந்தப் பெருமூச்சில் ஏக்கம் எதிரொலித்தது. 'அம்மா' என்ற அந்த வார்த்தை குழந்தையின் வாயிலிருந்து வந்தவுடன் ராஜுவின் உள்ளத்தில் சோகச் சூறாவளி வீசலாயிற்று. இறந்த காலத்தின் இன்ப நினைவுகள் அவன் இதயத்தைத் தாக்கின. மறைந்த மனைவியின் உருவத்தை எண்ணினான். மகளின் முகம் பார்த்தான்: தன் மகள் இப்போது 'அம்மா அற்ற அனாதை' என்று தோன்றிய எண்ணம் அவன் இதயத்தை இறுக்கிப் பிழிந்தது. கண்களில் நீர் துளித்தது.

"எம்ப்பா அழுவுறே?" என்று சொல்லித் தன் சிறு விரல்களால் பேபி, ராஜுவின் கண்ணீரைத் துடைத்தாள். ராஜு பேசவில்லை. அவனால் பேச முடியவில்லை.

"அம்மா எப்பேபா ஊர்லேருந்து வருவாங்க, அப்பா?"

குழந்தையின் குரலில் ஏக்கம் எக்களித்தது. ராஜு நிலைமையைச் சமாளித்துக்கொண்டு "சீக்கிரமா ஊர்லேருந்து வந்துடும். நாம சாப்பிடப் போகலாம் வா, பேபி" என்று லக்ஷ்மியைத் தூக்கிக்கொண்டு சமையற் கட்டிற்குள் நுழைந்தான்.

அவன் மனம் மட்டும், "தாயற்ற இந்தப் புத்திசாலிக் குழந்தையிடம் இப்படிப் பொய் சொல்லி இன்னும் எத்தனை நாளைக்கு உன்னால் ஏமாற்ற முடியும்?" என்று அவனை நோக்கிக் கேட்டது. அதற்குப் பதில் அளிக்க ராஜுவால் முடியவில்லை.

3

ஒரு நாள் வெளியில் தலை நீட்ட முடியாத வெயில் எரித்துக்கொண்டிருந்தது. ராஜு வேலைக்குப் போய்விட்டான். லக்ஷ்மியின் உபத்திரவம் பொறுக்கமாட்டாமல் ராஜுவின்

தாயார் அவளைத் தூக்கிக் கொண்டு மாடிக்குச் சென்றாள். மாடியில் அனல் காற்று அவ்வளவு கடுமையாக வீசவில்லை. மாடிக்குச் சென்றதுதான் தாமதம்! லக்ஷிமி லலிதாவிடம் தலை வாரிக்கொள்ளச் சென்று விட்டாள்.

லலிதாவும் குழந்தைக்குக் கதை சொல்லிக்கொண்டு தலை வாரிவிட ஆரம்பித்தாள். வீட்டு வேலைகளை முடித்துவிட்டு லலிதாவின் தாயாரும் வெளியே வந்தாள். இரண்டு வயதான பெண்கள் கூடினால் வாய் சும்மாவா இருக்கும்?

"லலிதாவும் லக்ஷிமியும் ஏக ராசி. நான் தலை சீவி விடுறேன்னு என் கிட்டப் படிய மாட்டேங்குது. லலிதா தலை சீவி விட்டா ‘க[illegible]’னு உக்காந்து சீவிக்குது லலிதா...... லக்ஷிமியை எத[illegible]ம் மந்திரம், இந்திரம் போட்டு மயக்கி வச்சிருக்கியா? அப்படி எதாவும் இருந்தா எனக்கும் கொஞ்சம் சொல்லித்தாம்மா" என்று ராஜூவின் தாயார் லலிதாவைப் பார்த்துக் கேட்டாள்.

"மந்திரமாவது மாயமாவது அதெல்லாம் எனக்கு என்னத் தெரியும்? எது இன்னைக்கு நான் உங்க கிண்டல் பேச்சுக்கு அகப்பட்டுக்கொண்டேனேல்லியோ. இனி எங்கே நான் தப்பிக்கிறது?"

"லலி! தப்பிக்கிறேன்னு சொல்லிக்கிட்டு எங்கேயும் ஓடிப் போயிடாதே. உன் கல்யாணச் சாப்பாட்டை நம்பிக்கிட்டு இருக்கேன்?"

லலிதாவுக்கு வெட்கம் வந்துவிட்டது. அவள் முகம் சிவந்தது. லக்ஷிமியின் காதில் ‘கல்யாணம்’ என்ற வார்த்தை விழுந்ததுதான் தாமதம். லலிதாவின் முகத்தைப் பார்த்தாள். எதையோ கண்டுபிடித்து விட்டவள் போல் ஒரு துள்ளுத் துள்ளினாள்

"இதுக்குக் கல்யாணமா?" என்று லலிதாவைச் சுட்டிக் காட்டியபடி கேட்டாள்.

‘ஆமாம்’ என்பதற்கு அறிகுறியாக அவளும் தலையசைத்தாள்.

"நீ கார்லே போறப்ப என்னையும் ஓம் பக்கத்திலே உக்கார வைச்சுக்கணும் அன்னிக்கி நானு புதுச்சட்டையெல்லாம் போட்டுக்கிட்டு வருவனும்"

இதைக் கேட்டதும் லலிதா வின் உதட்டின் ஓரத்தில் சிரிப்பு நெளிந்தது.

இதையெல்லாம் கேட்டுக் கொண்டிருந்த லலிதாவின் தாயார், "நீங்க ஒண்ணு, இவ ளேக் கல்யாணம் பண்ணிக் கிறேன்னு வர்ரவன் எல்லாம், 'எத்தனே பவுனுக்கு நகை ேபாடுநீங்க? எவ்வளவு சீர் செய்வீங்க'ன்னு கேக்கிறன் களே ஒழிய வேறே எதைக் கேக்கறுன்க. இவ அப்பா வாத் தியார் வேலே பார்த்துச் சம்பா திக்கிற பணம் வயித்துப் பாட் டுக்கே பத்தமாட்டேன்குது. பத்துப் பவுனுக்கும், இருபது நகை போடுறதுக்கும் எங்கே போறது. அதனுல்தான் இவ கல்யாணம் இன்னும் நடக்காம இருக்கு" என்று தன் குறை யைக் கூறினள்.

"ஆமாம் கல்யாணம் பண் ணிக்க வர்ர மாப்பிள்ளே எல் லாம் பொண்ணேக் கட்டிக்கப் போறுன்களா? இல்லே, நகை யையும் பணத்தையும் கட்டிக் கப் போறுன்களா? எங்க ராஜு கல்யாணத்தப்ப நாங்க சீர் செனத்தின்னு ஒண்ணும் கேக் கல்லே. ஏதோ அவுங்க செய லுக்குத் தகுந்தாப்போலச் செஞ் சாங்க. பொண்ணேட குணத் துக்கு ஆசைப்பட்டுத்தான் கல் யாணம் பண்ணிவைச்சேன். எங்களுக்குக் குடுத்துத்தான் வைக்கல்லே. போன வருஷம் 'டைபாய்ட்' காய்ச்சல்லே தவ றிப் போயிட்டா. சரியா நாலு வருஷம்கூட ஆகல்லே. இப்போ இந்த வாலே வைச்சுக்கிட்டு நான் வாதைபட வேண்டிய தாய் இருக்கிறது" என்று தன் னுடைய வயிற்றெரிச்சலே வர்ண மாகப் பாடி முடித்தாள் லக்ஷி மியின் பாட்டி.

"இப்ப என்ன தம்பிக்கு வயசு ஆயிட்டு: இருபத்தி அஞ்சு இருபத்தி ஆறு இருக் கும். வேறே ஒரு பொண்ணு பார்த்துக் கல்யாணம் செஞ் சுட்டாப் போச்சு?"

"கல்யாணம் பண்ணி வைக் கிறது ஒண்ணும் கஷ்டமில்லே, வர்ரவ குழந்தையை ஒழுங்கா நடத்துறவளா இருந்தாப் போச்சு. அப்படி இல்லாமே அவபாட்டுக்குக் குழந்தையைச் சீருபாரா அடிச்சா, பிறகு என்ன செய்யிறது? நம்ம லலி தாவைப் போலப் பொண்ணு கிடைச்சா நாளேக்கே கல்யா ணத்தை நடத்திடுவேன்."

"எங்களுக்கும் ரொம்பச் சவு கரியமாப் போச்சு. உங்களுக் குப் பிரியமா இருந்தா லலிதா வையே தம்பிக்குக் கல்யாணம் செஞ்சு வைச்சுடுங்களேன். எங்களுக்கு இதிலே ஒண்ணும் ஆக்ஷேபனே இல்லே" என்று கூறி லலிதாவின் தாயார் சிரித் தாள்.

"எம்பாட்டி இது அப்பாவெ கல்யாணம் பண்ணிக்கிட்டா இதை நான் அம்மாண்ணு தானே கூப்புடணும்?" என்று பேசி தன்னுடைய சந்தேகத் தைப் பாட்டியிடம் கேட்டது.

"ஆமாம் லெச்சுமி" என்று கூறினள் குழந்தையின் பாட்டி.

"சார், நம்ம பொண்ணு சினிமா விலே சேரனும்னு அழுது புலம் பற சார். ஏதாவது ஒரு சான்ஸ் இருந்தாக் கொடுங்களேன்"

"சந்திரமதியின் கண்ணீருன்னு ஒரு படம் எடுக்கறேன். அதிலே கதாநாயகி வேஷம் கொடுத்தாப் போச்சு"

"சரி...நீ வாம்மா நம்ம வூட் டுக்குப் போவோம்" என்று லலிதாவைக் கீழே கூப்பிட் டாள். அம்மாவிடம் நடந்து கொள்ளும் மாதிரிக்கு அப் பொழுதே ஒத்திகை எடுத்துக் கொண்டது குழந்தை. லலிதா நாணத்தால் தலை குனிந்தாள். இன்பக் கனவுகள் அவள் இத யத்தில் தோன்றலாயின. அவள் உதட்டிலிருந்து ஒரு சொல் கூட வரவில்லை.

"பாத்தீங்களா...பாத்தீங்களா அதுக்குள்ளே அம்மாவெ வூட்டுக்குக் கூப்பிட ஆரம்பிச் சுட்டுதே லெக்ஷிமி...உம், ஒன் வாய் முகூர்த்தத்திலாவது ஒரு நல்ல காரியம் நடக்கட்டும்" என்று லலிதாவின் தாயார் சொன்னாள். எல்லோருக்கும் மகிழ்வூட்டும் முறையிலே பேச்சுகள் நடந்தன. ஆனால் லலிதாவோ, "குழந்தையின் உள்ளத்திலே காலியான தாய் ஸ்தானத்தைத் தன்னால் பூர்த்தி செய்விக்க முடியுமா?" என்ற யோசனையில் ஆழ்ந்தாள்.

4

அன்று ஞாயிற்றுக்கிழமை. ராஜுவுக்கு லீவு நாள். அவன் வீட்டில் பத்திரிகை படித்துக் கொண்டிருந்தான். பேபி பத்திரி கையில் வந்திருக்கும் படங் களைப் பார்த்துக் கொண்டிருந் தது. அவன் அம்மா அவனை எப்படியும் மறு கல்யாணம் செய்துகொள்ள வைத்துவிட வேண்டும் என்ற தீர்மானத் துடன் அவனிடம் வந்தாள்.

"ஏன் ராஜு, அவள் போயித் தான் ஒரு வருஷமாச்சே. இன் னும் எத்தனை நாளைக்குத்தான் இப்படி இருக்கப்போறே?" என்று ஆரம்பித்துத் தன் எண் ணத்தின் ஒரு மூலையைக் காட்டி னாள். அவள் கேள்விக்கு அவன் பதில் அளிக்கவில்லை. பத்திரிகை படிப்பதுபோல் பாசாங்குசெய்து கொண்டிருந்தான். அவன் உள் ளம் இந்தக் கேள்வியால் குழப்ப மடைந்தது.

"நான் கேக்கிறது காதிலே விழல்லே. பேசாம உக்காந்து இருக்கியே?"

"நீ கேக்கிறது காதிலே விழு வுது அம்மா... இப்ப யாரு பொண்ணு குடுக்கிறேன்னு வந்

திருக்காங்க?'' என்று அவன் கேலியாகக் கேட்டான்.

"கேலிப்பேச்சுக் கெடக்கட்டும் தம்பி. கேட்டதுக்குப் பதில் சொல்லு?"

"நான் என்னத்தைச் சொல்லக்கிடக்குது. ரெண்டாம்தாரம் பண்ணிக்கொண்டவன்களைப் பாத்தும் உனக்குப் புத்தி வல்லியா? போம்மா... நான் முதல் கல்யாணம் பண்ணிக்கிட்டு அனுபவித்த சுகம் போதும். இனிமே எனக்குக் கல்யாணமும் வேணும் ஒண்ணும் வேணும். பேபியை மட்டும் ஒழுங்கா வளர்த்துட்டாப் போதும்..."

விரக்தி- வேதனை இருளிலே தோன்றியது வாஞ்சை மின்னல். அவன் தாயார் அவனைச் சுலபத்தில் விட்டுவிடத் தயாராய் இல்லை.

"அதெல்லாம் எனக்குத் தெரியாமெயா இருக்கு. இருந்தாலும் பெண் குழந்தைகளுக்கு 'அம்மா' இல்லாமெ சரிப்படுமா? மாடிமேலே குடியிருக்காரே வாத்தியாரு, அவர் பெண்ணைத் தான் பேசிவச்சிருக்கேன். அந்தப் பொண்ணுக்குப் பேபிமேலே உயிரு. பொண்ணும் குடும்பத்துக்கு ஏத்ததா இருக்கு. அவங்களுக்கும் அவளை ஒனக்குக் கொடுக்கிறதிலே பூர்ண திருப்தி. ஒன் அபிப்பிராயத்தைச்சொல்லு ராஜா"

"எனக்கு என்ன சாமியா வந்திருக்கு சொல்றதுக்கு. எனக்குக் கல்யாணம்,கில்யாணம் ஒண்ணும் வேணும்மா?" அவன்

"என்ன சார் நீங்க மேக்கப் பண்றதுக்குள்ளே உசிரையே வாங்கிடுவிங்க போலிருக்கே!"

உள்ளம் கடமை உணர்ச்சியால் மூடப்பட்டு இருந்தது. அதில் மனைவியின் இடம் காலியாக இருந்தாலும், மகளின் சுகத்துக்காக அதை வேறு ஒருவருக்கு அளிக்க மனம் மறுத்தது.

"அப்பா... அப்பா... லலிதா அம்மா ரொம்ப நல்லவங்க அப்பா... அன்னிக்கி எனக்கு முட்டாயியெல்லாம் குடுத்துச்சு. நீ அவுங்களையே கலயாணம் பண்ணிக்கோ அப்பா... என்ன பேசாம இருக்கே. கல்யாணம் பண்ணிக்கிறேன்னு சொல்லப்பா" என்று கெஞ்சியது குழந்தை.

அவன் சிரித்தான். குழந்தையின் இளம் உள்ளத்தின் இயல்புகள் அவனுக்குத் தெரியும். அன்புப் பேச்சு, மலர்ந்த முகம் இவைகள் அவற்றை நிறைவு செய்துவிடும். ஆனல் உள்ளத்தே நஞ்சும், உதட்டிலே

தேனுமாகப் பேசும் உருவங்கள் உலவுவதை அது அறியாது. அன்பினுல் ஆக்கப்பட்ட உலகமா யிருந்தால் குழந்தையின் வார்த்தைகளுக்கு அவன் கட்டுப் பட்டு இருப்பான். ஆனல்... உலகம் குழந்தையின் உள்ளம் போன்று இருக்கிறது?

இந்த அருமையான சந்தர்ப் பத்தை அவன் தாய் நழுவவிடத் தயாராய் இல்லே.

"கொழந்தை சொல்றதைக் கேட்டியா ராஜு? இன்னும் ஒனக்கு என்ன ஆக்ஷேபணே இருக்கு?"

"யாருக்கும் தாயில்லாப் பிள்ளேயினுக் கொஞ்சம் பிரியம் தான் இருக்கும். அதுக்காகப் பிரியமா யிருக்கிறவங்களே எல் லாம் கல்யாணம் செஞ்சுக்க முடியுமா? இந்தக் காலத்துப் பெண்களேப்பத்தி ஒனக்கு ஒண் ணும் தெரியாது. அதுங்க முதல் தாரத்துக்குப் பிறந்த குழந்தை யைத் தன் சுகத்துக்கு முட்டுக் கட்டையாக நிணைக்கும் குண முடையதுகள். உன் வேலேயைப் பாத்துக்கிட்டுப் போம்மா,சும்மா கல்யாணம் கல்யாணம்னு நச்சரிக்காமெ."

"இந்த அரட்டையெல்லாம் எதுக்கு அடிக்கிறே? ஒனக்கு ரெண்டாம் கல்யாணம் வேணும். அவ்வளவுதானே."

என்று சொல்லி முகத்தைச் சுளித்துக்கொண்டு உள்ளே சென்றுள். மருமகள் வருவ தைத்தடுக்கும் மகன்மீது தாய்க் குக் கோபம் வராமல் என்ன சய்யும்!

லெட்சுமிக்குத் தாயார் மகன் இவர்களின் உரையாடல் உட் பொருள் சரியாகப் புரியவில்லே என்றாலும், 'அப்பா லலிதா வைக் கல்யாணம் செய்து கொள்ள மாட்டேன் என்குது' என்பதுமட்டும் புரிந்தது. மெது வாக ராஜுவிடம் நெருங்கியது.

"ஒனக்கு லலிதா அம்மாவெ புடிக்கல்லேயா அப்பா" தனக்குப் பிடித்தமானவளே அவன் வெறுப்பதின் இரகசியத்தை அறிந்துகொள்ள அது விரும்பி யது.

"உனக்குப் பிடிச்சிருந்தா எனக்கும் பிடிச்சிருக்கு"

"எனக்குப் பிடிச்சிருக்கு"

"அப்ப எனக்கும் பிடிச் சிருக்கு"

"அப்பன்ன அவுங்களே ஏனப்பா கல்யாணம் பண்ணிக்க மாட்டேன்கிறே?"

இந்தக் கேள்விக்கு ராஜுவால் பதில் அளிக்க முடியவில்லே. அவன் உள்ளம் பெற்ற தாய்க் கும் மாற்றுந்தாய்க்கும் உள்ள வித்தியாசத்தைப்பற்றிச் சிந் தித்தது.'பெற்றவளுக்குத்தானே தெரியும் பிள்ளேயின் அருமை! மற்றவர்களால் எப்படிப் புரிந்து அதன் தேவைகளேப் பூர்த்தி செய்விக்க முடியும்? அந்த இடம் காலியானல் அதைப் பூர்த்தி செய்ய யாராலும் முடியாது' என்று அவன் மனச்சாட்சி கூறி யது.

"எனக்கு வெளியே கொஞ் சம் வேலேயிருக்கு... அதைப் பார்த்துட்டு வாரப்ப உனக்கு மிட்டாய் வாங்கிட்டு வர்ரேன் பேபி" என்று கூறிக் குழந்தை யின் கேள்விக்கு நேரடியாகப் பதில் கூறுமல் மழுப்பிவிட்டு வெளியேறினன். குழந்தையின்

முகம் சுருங்கியது. குழந்தைக்கு என்ன கவலையோ!

5

ராஜூவின் குடும்பம் கீழ்க் கட்டைக் காலி செய்துவிட்டுப் போய் இரண்டு மாதங்களாயின. லலிதாவின் கண்களுக்குக் கீழ்க் கட்டைப் பார்க்கும்போதெல்லாம் லெட்சுமியின் ஞாபகம் வந்துவிடும். அவளால் குழந்தையின் குறுகுறுத்த பார்வையையும், குழிவிழும் கன்னங்களையும் குதலை மொழிகளையும் மறக்க முடியவில்லை. லெட்சுமி லலிதாவின் இதயத்தில் ஒரு இடத்தைப் பெற்றுவிட்டாள். அவள், தன்னை ராஜூ மணக்க முடியாது என்று கூறியபோது வருத்தப்படவில்லை. அவள் லெட்சுமியை விட்டுத் தனியாக இருப்பது பற்றித்தான் வருத்தப்பட்டாள். அவள் வருத்தப்பட்டு என்ன செய்வது!

எதை எதையோ நினைத்துக் கொண்டு லலிதா உட்கார்ந்திருந்தாள். வெளியில் கதவைத் தட்டும் ஓசை கேட்டது. அதைத் தொடர்ந்து "சார் இருக்காங்களா?" என்ற ஒலியும் கேட்டது. "யாரது?" என்று கேட்டாள் லலிதா.

"நான்தான் ராஜூ... சாரைப் பார்க்கணும்"

"ராஜூ...... லெட்சுமியின் தந்தை' ஏதோ எண்ணினாள்.

"கொஞ்சம் இருங்க... அப்பாவை வரச் சொல்றேன்" என்று சொல்லி வேகமாக உள்ளே ஓடினாள்.

"அப்பா உங்களைத் தேடிக்கிட்டு, கீழே குடியிருந்தாரே ராஜூ, அவர் வந்திருக்கார். போய்க் குழந்தையெல்லாம் சவுக்யமான்னு கேளுங்க" அவள் வார்த்தையில் ஆர்வம் தொனித்தது. அவர் கீழே வந்தார்.

"என்ன தம்பி சவுக்யமா? வீட்டிலே அம்மா குழந்தை எல்லாம் சவுக்யந்தானே?" என்று கேட்டவர் ராஜூவின் முகத்தில் தோன்றிய மாறுதலைக் கவனித்ததும், "வீட்டிலே யாருக்கும் உடம்பு சவுகர்யமில்லையா?" என்று திருப்பிக் கேட்டார்.

"குழந்தைக்குத்தான் ஒரு வாரமா உடம்பு சுகமில்லை."

"என்ன செய்யுதுன்னு கேளுங்க அப்பா" என்று இடையிலே புகுந்து கேட்டாள் லலிதா.

"இந்த வீட்டைக் காலி செஞ்சுட்டுப் போனதிலிருந்தே குழந்தை ஒரு மாதிரியா இருந்துச்சு. அப்பறம் லேசா ஜூரம் கண்டுச்சு. டாக்டரை அழைச்சு வந்து காண்பிச்சேன். அவரும் என்னென்னவோ மருந்தெல்லாம் குடுத்தாரு. அதற்கெல்லாம் ஜூரம் கட்டுப்பட்டமாதிரி தெரியல்லே. இப்ப ரெண்டு நாளா 'லலிதா அம்மா எங்கே. லலிதா அம்மா எங்கே'ன்னு பிதற்ற ஆரம்பிச்சுட்டு. எனக்கு என்ன செய்யறதுன்னு புரியல்லே. எனக்குப் பைத்தியம் பிடிச்சுடும்போல இருக்கு. நீங்கதான் இந்தச் சமயத்திலே உதவி செஞ்சு குழந்தையைக் காப்பாத்தணும்..." என்று சொல்லிக் கொண்டு வரும்போதே அவனுக்கு அழுகை வந்துவிட்டது.

"என்ன உதவி தம்பி நான் செய்யணும். சொல்லுங்க. எப்படியாவது குழந்தை ஜுரத்திலேருந்து தப்பிச்சாப்போதும்."

"நீங்க ஒங்க குடும்பத்தோட கொஞ்ச நாளைக்கு என் வீட்டிலே வந்து தங்கியிருந்தீங்கன்னு குழந்தைக்கு உடம்பு சவுகர்யமாகலாம்னு நினைக்கிறேன்." ராஜு அவரைக் கெஞ்சும் தோரணையில் கேட்டான்.

"இதுதானு பிரமாதம்! நீங்க போங்க.நான் வீட்டிலே எல்லோரையும் அழைச்சுக்கிட்டு வர்ரேன்"

"வண்டியெல்லாம் வாசல்லே நிக்குது. நீங்க எவ்வளவு சீக்கிரம் வரமுடியுமோ அவ்வளவு சீக்கிரமா வாங்க" என்று சொல்லி அங்கே நின்றுகொண்டிருந்த லலிதாவைப் பார்த்தான். அவள் முகத்தில் படர்ந்திருந்த சோகத்தின் நிழலைக் கவனித்ததும் அவனுக்கு ஆச்சரியம் ஏற்பட்டது. ஏதோ ஒரு எண்ணம் அவன் உள்ளத்திலே 'பளிச்'சிட்டது. விர்ரென்று வெளியேறினுன்.

6

"ஏம்மா இப்ப பேபிக்கு உடம்புக்கு எப்படி இருக்கு?' என்று கேட்டுக்கொண்டு உள்ளே நுழைந்தான் ராஜு. அவனுக்கு அதே நினைவு, கவலை.

"அவள் அசந்து தூங்குருள். அவுங்க யாரும் வரல்லியா?"

"எல்லோரும் பின்னுலே வண்டியிலே வர்ராங்க" என்று சொல்லிவிட்டுக் குழந்தை படுத்திருக்கும் கட்டிலண்டை சென்ருன்.குழந்தைஅயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தது. ஜுரத்திஞல் முகம் வெளுத்து இருந்தது. உதடுகள் உலர்ந்து இருந்தன. தூக்கத்திலும் குழந்தையின் முகத்தில் துயரம்தாண்டவமாடிக் கொண்டிருந்தது.

குழந்தையை இந்த நிலையில் காணும்போது ராஜுவின் உள்ளம் குமுறியது. வேதனை வெள்ளம் கண்களிலிருந்து வெளிப்பட்டது. பேபி விழித்துக் கொண்டாள்.

"அம்மா உம் அம்மா" முனகத்தொடங்கியது. குழந்தையின் உள்ளத்தின் அடிவாரத்திலிருந்து வந்த "அம்மா" என்ற சொல் ராஜுவின் சிந்தனையை உலுக்கியது. தந்தையினுல், காலியான தாயின் இடத்தைப் பூர்த்தி செய்ய முடியாது. ஆனுல் யாரை அந்த இடத்தில் அமர்த்துவது என்ற கேள்வி அவனுள் எழும்பியது. மறுபடியும் குழந்தை முனக ஆரம்பித்தது. வெளியில் வண்டி வந்து நின்ற சத்தம் கேட்டது.

"பேபி, அம்மா.வந்துட்டுது... முனகாதே அம்மா" என்று செல்லமாகச் சொன்னுன்.

"நீ பொய் சொல்றே, அம்மா எங்கே வந்திருக்கு காட்டு பாப்போம்" என்று குழந்தை சொல்லிக்கொண்டிருக்கையில் லலிதாவும் மற்றவர்களும் உள்ளே நுழைந்தார்கள்.

"அதோ பார் அம்மா" என்று லலிதாவைப் பேபிக்குக் காட்டினுன் ராஜு. லலிதாவைக் கண்ட லெட்சுமி, "அம்மா" என்றழைத்தது. லலிதா குழந்தையை அணைத்து முத்தமிட்டாள். குழந்தையின் முகத்தில் தவழ்ந்து

கொண்டிருந்த கவலை மறைந்து ஒரு ஒளி தோன்றியது. அந்த அணைப்பிற்குத்தான் என்ன சக்தியோ!

"இப்பதான் வர்றீங்களா அம்மா" குழந்தை குசலம் விசாரிக்கத் தொடங்கியது.

"ஆமாம் இப்பத்தான் வந்தேன் பேபி"

"முட்டாயி யெல்லாம் வாங்கிட்டு வந்திருக்கீங்களா?" குழந்தைக்குப் பழைய ஞாபகம்.

"உனக்கு ஜூரமா இருக்குல்ல. அதனாலே முட்டாயி தின்னக்கூடாது. பழம் வாங்கியாந்து இருக்கேன். சாப்பிடு" என்று சொல்லித்தான் கொண்டு வந்திருந்த சாத்துக்குடிப் பழத்தை உரித்து ஒரு சுளையைக் கொடுத்தாள்.

அதைக் கையில் வாங்கிய குழந்தை, "நீங்க இங்கேயே தானே இருப்பீங்க. என்னை உட்டுட்டுப் போயிட மாட்டீங்களே?" என்று சந்தேகத்துடன் கேட்டது.

இந்தக் கேள்வி ராஜூவைத் திகைக்கச் செய்தது. லலிதாவுக்கும் லெட்சுமிக்கும் உள்ள அந்த இணைப்பு, அன்பின் சக்தி ராஜூவை ஆச்சரியத்தில் ஆழ்த்தியது.

"அம்மாவின் ஸ்தானம் பூர்த்தி செய்விக்க முடியாதது அல்ல. அன்பின் உருவம்தானே அம்மா. குழந்தையின் கண்களுக்கு அன்புக் களஞ்சியமாகத் தோன்றும் லலிதாவே அவளுக்குத் தாயானால்... குழந்தையின் உள்ளத்தில் காலியான இடம் பூர்த்தியாய்விடும் அல்லவா?" ராஜூ சிந்தித்தான்.

அவன் வாய், "இனிமே இந்த அம்மா உன்னை உட்டுட்டுப் போகாமே செய்துடுறேன்" என்று கூறியது. அவன் கண்கள் லலிதாவின் தந்தையை நோக்கின. ஒரு சிரிப்புத்தான் அவன் பார்வைக்கு அவர் அளித்த பதில்.

லலிதா தலை குனிந்தாள். அவள் உள்ளத்தில் காலியாயிருந்த கணவன் ஸ்தானம் பூர்த்தி செய்விக்கப் பட்டதில் அவளுக்கு ஒரு பூரிப்பு. குழந்தை லட்சுமி, லலிதாவின் கழுத்தைக் கட்டிக்கொண்டு "அம்மா" என்று அன்பொழுக அழைத்தது. 'பேபி'க்கு ஒரு அம்மாள் கிடைத்துவிட்டாள். அவளை வருத்திய ஏக்கமும் காய்ச்சலும் தங்கள் இடங்களைக் காலிசெய்ய ஆரம்பித்தன.

போன் : 2549

தந்தி: "IMAGE"

எங்களிடம்

ஜன்னல் கண்ணாடிகள்
பலநிறக் கண்ணாடிகள்
முகம்பார்க்கும் கண்ணாடிகள்
மூன்றேட்டுப் பலகைகள்
படங்கள், சட்டங்கள்
மேசைக் கண்ணாடிகள்
முதலியன கிடைக்கின்றன.

R. ETHIRAJIAH & SONS

103 Devaraja Mudali Street, P. T., Madars - 3.

ஆதி சங்கீத புத்தகங்கள்

1. ஆதி சங்கீத ரத்னாவளி
(ஏழாம் பதிப்பு)
விலை ரூ. 5-0-0
2. ஆதி தியாகராஜஸ்வாமி
கீர்த்தனைகள்
விலை ரூ. 5-0-0
3. தமிழிசைப் பாடல்கள்
இயற்றியவர் திருவொற்றியூர்
ஜெகந்நாதம்
விலை ரூ. 1-0-0
4. ஆதி சங்கீத சித்ராம்பரி
விலை ரூ. 1-8-0

எம். ஆதி அண்டு கம்பெனி
சங்கீத புத்தக வியாபாரிகள்
11-286, சைனாபஜார், சென்னை

Telegram: 'PUNT COMPANY'

Telephone: 55085

பண்ட் & கம்பெனி

(Estd. 1890)

உறுதியான தோலினால் அழகான சூட்கேஸ், மணிபர்ஸ், ஸ்லிப்பர்ஸ், சான்டல்ஸ், பெல்ட் முதலியன நாங்கள் செய்கிறோம். உங்கள் தேவைக்கு எழுதுங்கள்.

PUNT & COMPANY

Chrome Leather Works

170, Broadway, G. T. MADRAS

தமிழ் விருந்து

3. வறுமை மாய்ந்தது.

"தமிழ்த்தம்பி"

மங்கள வாத்தியங்கள் ககன வெளியிலே முழங்க, முகமண்டலத்திலே மகிழ்ச்சி விளங்க, தோற்றத்திலே பெருமிதம் புரள, விழிகளிலே கம்பீரம் மிளிர, 'ஜாம் ஜாம்' என்று தேர்மீது ஊர்ந்துவந்து கொண்டிருந்தார் தீந்தமிழ்ப் புலவர். மணக்கோல மாப்பிள்ளையைக் கூட மிஞ்சக்கூடிய இன்பம் அவர் உள்ளத்திலே இடம் பெற்றது. ஆம்; அவர்கூட ஒரு வகையிலே வாலிபமிடுக்கு நிரம்பிய மாப்பிள்ளைதான். கவிதைச் செல்வியை என்று அவர் மணந்தாரோ, அன்று முதல் அவர் நிலையே தனிப்பட்டதுதான். அந்த அழகரசி இன்றுதான் அவருக்கு வாகை மாலை அணிவித்தாள். அதன் சின்னம்தான் அவர் முன் சொன்னபடி தேர்மீது களிப்பின் உருவமாக ஊர்ந்துகொண்டிருந்ததும், அவரைப் பின் தொடர்ந்து ஒரு மாபெரும் யானை ஒன்று வருவதும். 'இனிமை நிறைந்த தமிழ்ச் செல்வத்துக்கல்லவா நாம் பரிசு வழங்கப்பட்டோம்!'' என்ற எக்களிப்பு அப்பெரிய யானையின் சிறிய கண்களில் நிலை கொள்ளாது தவழ்ந்தது. தரையில் உருளும்போது தேர்ச் சக்கரங்கள் செய்த 'கடமுட' ஒலி விடுதலை வெற்றிகண்ட அடிமை மக்களின் மகிழ்ச்சிப் பெருக்கிலே பிறந்த இன்ப ஒலியை ஒத்திருந்தது.

களைப்படைந்த ஏவலாளர்கள்—தமிழ்க் கவிஞரோடு யானையை அழைத்துச் செல்லும்படி அரசனால் ஏவப்பட்டவர்கள்—இளைப்பாற எண்ணங் கொண்டனர். இரக்கம் புதைந்து கிடந்த புலவரின் இதயம் ஏவலாளர் விரும்பியதை மறுக்கவில்லை. அண்மையிலே ஒரு பெரும் ஆலமரம் விழுதுகளோடு பரந்த நிழலைப் பரப்பிக் கொண்டிருந்தது. சிறிய வித்து கால முயற்சியிலே தந்த பெரிய நிழலில் அப்பரிவாரம் அடைக்கலம் புகுந்தது.

அதே ஆலமரத்தை நாடிக் கடும் வெயிலுக்கு ஒதுங்க ஒரு பாணனும் ஒரு விறலியும் வந்தனர். வறுமையின் அசைக்கமுடியா வலிவு அவர்களுடைய உடலைத் தன்னாலியன்றமட்டும் பதம் பார்த்திருந்தது. சோகம் படர்ந்து களையிழந்திருந்த அந்த வதனங்களில் அறிவு ஒளி வீசாமலில்லை. இன்னல்கள் கீறிய கோடுகளும், துக்கம் வரைந்த கீறல்களும் அவ்வொளியை

மறைக்க முயன்றன. கதிரொளியை மூடக் கந்தைத்துணி முற்பட்டால் எப்படியிருக்கும்? அப்படித்தான் இருந்தது அந்த நிலையும். புலவர் அவர்களைக் கண்டதும் புதையல் பெற்ற ஏழைபோலத் துள்ளி மகிழ்ந்தார். அவர்களை அன்போடு வரவேற்றுப் பசியார உணவளித்தார். அவர்களின் களைப்பும் அலைப்பும் நீங்க இன்மொழிகள் பல புகன்றார். அவர்களுடைய தரித்திர நிலையைக் கண்டு உள்ளம் புழுங்கி நெக்குருகினர்.

* * *

வெளியே சுட்டுப் பொசுக்கிய படைபதைக்கும் வெயில் அவனுக்கு ஒரு பொருட்டாகத் தோன்றவில்லை. அதை ஒரு பெருந் துன்பமாகக் கொள்ளவும் அவன் மனம் இடந்தாவில்லை. சுழன்று சுழன்று வீசிய வரண்ட காற்றும் அவனை ஒன்றும் வருத்தவில்லை. ஓலை வேயப்பட்ட அக் கீற்றுக் குடிசைதான் அவன் உரிமைப் பொருள்; சொத்து. அதுவும் எத்தனையோ பெருங் காற்றுகளுக்கு ஈடுகொடுத்து ஆங்காங்கு கிழிந்திருந்தது, அவன் வாழ்க்கை துன்பப் புயல்களைச் சமாளித்து ஆங்காங்கு உடைந்திருப்பதைப் போல. குறைந்தது மூன்று தலைமுறைகளையாவது கண்டிருந்த அக்குடிசையின் பழமையான சுவர் கறையான் கூட்டத்துக்கு ஒரு நிரந்தர வீடாக மாறிவிட்டது. புழுதி படிந்து, தூசு நிறைந்து, குப்பை பறந்த அக்குடிசையிலே காளான்கள் நினைத்த இடத்திலே (யாரையும் கேட்காமல்) சுயேச்சையாகப் பூக்கத் தொடங்கின. அங்கேயே பிறந்து, வளர்ந்து, வாழ்ந்த அவன், வாழ்க்கையிலே ஒரு தமிழ்க் கவிஞன். தோன்றும் போதே கலைவெள்ளத்தில் மிதந்த அக் கவிதை மணாளனை மதித்துப் பாராட்டிப் புகழ யாருமில்லை. அழிவு அரக்கன் அவ்வீட்டின்மீது தன் முழுத் திறமையையும் ஒரே சமயத்தில் காட்டாது (அவன்மீது கருணை வைத்தோ, என்னவோ) சிறிது சிறிதாகக் காட்டி வந்தான். அந்தமட்டும் அழிவரக்கனுக்கு நன்றி செலுத்தினன் கவிஞன்.

"ளொள்" என்ற நாயின் குரைப்பு அவன் சிந்தனையைக் கலைத்தது. ஆம், தான் பாராட்டிச் சீராட்டி அன்புகாட்டிய நாய் தான் அது. ஏன் அது குரைத்தது என்பதை அறிய அதைத் தேடுவதில் முனைந்தான் அவன். பல நாட்களாக அடுப்பே மூட்டப்படாமல் இருந்ததால் இருள் படிந்து பொலிவிழந்திருந்தது அடுப்பு. அந்த இருட்குகையிலே படுத்திருந்தது குரைத்த நாய். ஒருவேளை தான் பசியோடு அல்லற் படுவதைத் தன் எஜமானர் அறிந்தால் சகிக்கமாட்டார், கற்பனை நிறைந்த அவர் உள்ளம் எதை எதையோ நினைத்து செக்கிலேபட்டுப் பிழியப்பட்ட கரும்பு போல உருகிவிடும் என்று அந்த நாய் எண்ணிற்றோ என்னவோ,

அவர் கண்ணுக்குப்படாமல் அந்த இருட்செறிவில் மறைந்திருந்தது. இவ்வளவுப் புத்திசாலித் தனமான நாய் ஏனோ குரைத்துத்தான் இருப்பதை வெளிப்படுத்தி விட்டது? அது அதன் குற்றம் அல்ல. நேற்றுத்தான் பிறந்திருந்த அதன் குட்டியின் குற்றம். திறந்தும் திறவாமலும் இருந்த கண்களையுடைய அக் குட்டி நாய் தாய்நாயின் மார்பகத்தைத் தடவிக்கொண்டிருந்தது. பசிமிகுதி குட்டி நாயை அவ்வாறு செய்ய வைத்தது. அதே பசி தாய் நாய்க்கு உடல் முழுதும் வலியைத் தந்தது. வலித்த தன் உடலை யாராவது தீண்டினால் இன்னும் வலிக்குமல்லவா? 'வள்' என்று சீறிக் குட்டிமீது தனக்கிருந்த கோபத்தைக் காட்டிற்றுத் தாய் நாய். தான் பெற்ற குட்டிக்கே பால் தர அது மறுக்கிறதா? இல்லை. பசிவந்தால் பத்தும் பறக்கும் என்பார்களே? பசியின் தீவிரம் அதன் தாய்மையன்பைச் சிறை பிடித்துக் கொண்டு சென்று விட்டது.

உணர்ச்சி எழுச்சி தாழ்ச்சிகளை நன்றாக உணரும் கவிஞன் நரகவேதனையடைந்தான். தன்னை அண்டிப் பிழைக்கும் அவ் வாயில்லாப் பிராணிக்கும் தன்னால் துன்பம்தான். தன் பிரியத்தைக் கொள்ளைகொண்ட அந் நாயை அவன் ஒரு காலத்தில் எப்படி வைத்திருந்தான்? இப்போது வாழ்வின் இரு துருவங்களைத் தான் கண்டான் என்றால் தன் நாயும் கண்டு விட்டதே? இது எ[illegible] கோரம்? வறுமையின் கொடுபிடி அவனை உருக்கியது. தனக்கு ஏதாவது கிடைத்தால் முதலில் நாய்க்குத் தருவது என்று தீர்மானித்தான அவன். வீட்டில் அடுப்பு மூட்டிச் சமைத்து எத்தனை நாளாகி விட்டது? வீட்டில் சமைத்தால்தானே நாய்க்கு உணவு கிடைத்துக்கொண்டேயிருக்கும்? அது வயிறாரப் புசித்தால் அல்லவா குட்டிக்கு ஆசையோடு பால் கொடுக்கும்? எட்டாக் கனியை நினைத்துக் கொட்டாவி விடும் தன் நிலையை நினைத்து அவன் கண்ணீர் சிந்தினான்.

கொடும் பசியால் சோர்ந்து கிடந்த அவன் மனைவி தளர்ந்து வீழ்ந்திருந்தாள். கரும்புச்சாறு பிழியப்படுவது போல அவள் உயிரும் பசியால் பிழியப்பட்டது. வாழ்வில் சாவு என்பது இது தானா? பசியையும் பட்டினியையும் பள்ளியில் படித்தா அறிவது? ஏட்டுச் சுரைக்காய் கறிக்குதவாது என்பார்களே! படித்துப்பார்த்து அறியும் பசிக்கொடுமை அப்படித்தானே? பசிக்கொடுமையை ஏழை நாள்தோறும் உணருகிறான். பட்டினிப் பாடசாலையில் பசிக்கலையைத் தினந்தோறும் உணரும் ஏழையை அக்கலையில் மிஞ்ச எவராலும் முடியாது! ஒடுங்கிய அந்த இடுப்பால் அவள் உடல்சுமையைத் தாங்கக் கூட முடியவில்லை.

அவசியத்தின் தீவிரத்துக்கு அடிபணிந்தாள் அவள். [illegible]யிராயும் [illegible]யிராயும் கிடந்த [illegible] வீட்டின் சுற்

திலுமிருந்த குப்பை மலையைக் களைந்து எதையோ தேடிக் கொண்டிருந்தாள். கருமிச்குக் கைநிறையப் பொன் கிடைத்த மகிழ்ச்சி, வேளைக் கீரையைக் கண்டதும் அவளுக்கு ஏற்பட்டது. குப்பையில் முளைத்த கீரையைத் தன் கூரிய நகத்தால் பேராசையோடுகிள்ளி எடுத்தாள் அவள். அதில் கீரையை வேக வைத்தாள். சுவையைச் சேர்க்கக் கீரையுடன் உப்பு சேர்க்க வேண்டாமா? அது அவளிடம் ஏது? உப்பு இல்லாமல், பாதி வெந்தும் பாதி வேகாமலும இருந்த அக்கீரை தன் குடும்பத்துப் பசியைப் போக்குமா? இதைச் சிந்திக்க அவளுக்கு நேரம் ஏது?

அவள் சமையல் முடிந்தது. இனி விருந்து சாப்பிட வேண்டியதுதான்: தன் கணவனையும் குழந்தையையும் சாப்பிட அழைத்தாள். தானும் கூடச் சாப்பிட அமர்ந்தாள். இனி 'சுவைக்க' வேண்டியதுதான். வெளியே வீசிய காற்றிலே மூடப்படாது இருந்த கீற்றுக் கதவு திறந்துகொண்டது. அவசர அவசரமாக எழுந்துபோய் அது மறுபடியும் திறக்காமல் இருக்கும் வகையில் அதை மூடிவிட்டுவந்தாள்.

தான் சமைத்த 'அறுசுவை' உண்டியைத் தன் சுற்றத்தோடு 'விருந்தாக'ச் சாப்பிடுவதை ஊரிலுள்ள யாராவது பார்த்துவிடுவார்கள் என்ற அச்சம் அவளை அவ்வாறு செய்யவைத்தது. போலிக் கௌரவத்தை விரும்பாத கவிஞன் மனைவிக்கு இது போலி, செய்வது அறியாமை என்று தெரியாதா? தெரியும். இருந்தும் தனது 'மாளிகை'யிலே பரிமாறப்படும் 'விருந்தினை' வெளியோருக்குக் காண்பிக்க அவள் விரும்பவில்லை. ஏன்? "வறுமை வயப்படுவது இயல்பே. ஒருவன் எப்போதும் செல்வத்திலேயே மிதந்துகொண்டிருக்க முடியாமற் போகலாம். நிலைத்த தன்மையற்ற செல்வம் இன்று மணிமுடியைச் சூட்டினால் நாளை மண் முடியைச் சூட்டக்கூடும். ஆகையால் தரித்திர நிலைக்கு ஒரு கற்கண்டுப் பூச்சு தேவையில்லை" என்பதைக் கவிஞன் மனைவி அறியாளா? அறிவாள். பின் ஏன் தன் நிலையைப் பிறருக்குக் காட்ட அஞ்சுகிறாள்?

ஏழ்மை, நிலையடைவது இயற்கைதான். செல்வம் சகடக்கால் போன்றது என்பதை அறியாத சில மடமூளைகள் உள்ளன அல்லவா? அவை வறுமையைக் கண்டு எள்ளி நகையாடும் அல்லவா? இரக்கமே இல்லாத கொடுமை மனக்காரர்கள் தன் கணவரைப் பார்த்து, "ஆஹா! இவர்தான் இயற்கைக்கவி, எழிற்பாடகர். உண்மைக் கலைஞர். இவர் போன்றாரை ஆதரிப்பது செல்வர் பலரின் நல்வினையைப் பொறுத்தது! ஏனெனில் இவரைப் பலப் பல அரசர்கள் ஆதரிக்கும்போது கேவலம் செல்வர்களுக்கு எப்படி அந்த நற்பேறு கிட்டும்? பல அரசர்கள் ஆதரவை ஏற்க இவருக்கு அல்லவா நேரம் இல்லாமற்போய் விட்டது! நமக்கும்கூட அன்னார் விருந்திடுவார்! தேனும் பாலும் குடம் குடமாக அளிப்பார்!" என்று சொல்லித் தன் கணவரின் வறுமை நிலையைக் கேலி செய்து அவரை அவமானப் படுத்துவர் அல்லவா? மனிதனுக்கு மானம்தானே பெரிது?

ஒன்றை ஒன்பதாகப் பேசித் தினையளவு நிகழ்ச்சியைப் பனை அளவு பெருக்கும் மக்களினம் தன் வாழ்க்கை நிலை தெரிந்தால் தன் குடும்பமே பரிகசிக்கப்படும் அல்லவா? இதை எண்ணித்தான் அவள் அவ்வாறு கதவை மூடினாள்.

* * *

தமிழ்ப் புலவரின் கண்களிலே நீர் துளிர்த்தது. இருள் கவிந்து, சோகம் நிரம்பி, பொலிவிழந்து அமைதியின்மை குடிகொண்ட கவிஞரின் துயர் படர்ந்த வாழ்க்கையையா அவர் கண்டது? அல்லது தமது அடுத்த காவியத்திலே வறுமை நிலையை வருணிக்கத் திட்டமிடப்பட்ட கற்பனையா அது? இல்லையெனில் ஆல நிழலிலே கண்ட பாணனின் வாழ்வுச் சித்திரம் கண்முன்னே தீட்டப்பட்டதா? அல்லது விறலி நடத்திய சோக வாழ்க்கையா அது? தமிழ்ப் புலவரிடையே உலவிவந்த வறுமையின் ஓவியமா அது?

புலவர், விழிக்கடையிலே ஊற்றெடுத்துக் கொட்டிய கண்ணீரருவியை நிறுத்தினார். தம் அகக் கண்முன்னே கண்ட அப் பெரும் கவிஞனை ஐயறிவு கொண்ட நாயின் பசி நிலை கண்டு உள்ளம் புழுங்கின குணச்சித்ரத்தை—மனைவியின் பாழ்பட்ட உடல் நிலையினையும், பசி அவளை அணு அணுவாகச் சிதைத்த கோரக் காட்சியையும் கண்ட அன்புக் கணவனை—பாதி வெந்து உப்புச் சுவை குறைந்த வேளைக் கீரையைத் தன் குழந்தையோடு உண்ட ஆசைத் தந்தையை — அவரால் மறக்க முடியவில்லை. அவரால் மறக்கவும் முடியாது. நினைவுத் திரையிலே ஆழமாகப் புதைந்துவிட்ட அக்காட்சிகள் அவருடைய வாழ்க்கையிலே மங்கா நினைவுகள். ஏனெனில் அந்த ஏழைக் கவிஞர் வேறு யாருமல்ல. கழிந்த காலத் தம் வாழ்க்கையின் ஒரு சில அத்தியாயங்கள் தான் அவை. ஆம். கவிஞர் அவரேதான்.

தம் வாழ்க்கையின் இறுதி முயற்சியாக ஓய்மா நாடு சென்று அதன் தலைவர் நல்லியக்கோடனைப் புலவர் கண்டார். அவரிடம் தம் வறுமை வாழ்க்கையையும் கவிச் செல்வத்தையும் எடுத்துக் காட்டினார். புலவரை ஆதரிக்கும் பெருந்தகையாளனான நல்லியக்கோடன் ஏழைக் கவிஞருக்கு — அல்ல, அவரிடம் தங்கிவிட்ட கவிச் செல்வத்துக்கு--மரியாதையாக வழங்கிய பரிசில் தான் அவர் ஏறிவந்த தேரும், அவரைத் தொடர்ந்த யானையும். உள்ளம் நெகிழ்ந்து, அன்புச் சுழலில் தவித்து மனமார நல்லியக்கோடனை வாழ்த்தினார் புலவர்.

பாணனையும், விறலியையும் ஆலநிழலில் விளித்துப் புலவர் சொன்னார், ஆர்வப் புயலில் சிக்கி: "வேறு எந்த வள்ளலிடம் போக ஏற்கெனவே உறுதி கொண்டிருந்தாலும் முதலில் நல்லியக்கோடனிடம் செல்லுங்கள். அவன் மட்டுமன்றி ஓய்மா நாட்டு மக்கள்கூட உங்களிடம் அன்பு பாராட்டி உபசரிப்பர். கடையேழு வள்ளல்களும், தமிழ் மூவேந்தர்களும் கூட அவன் வள்ளன்மைக்குச் சமானமாக இருக்கமாட்டார்கள்.

உண்மையாகச் சொல்லுகிறேன், அவன் உங்கள் தரித்திரத்தை நிச்சயமாக ஒழிப்பான்."

புலவர் பேச்சிலே நன்றியும், பாராட்டும் போட்டியிட்டன. பாணனும் விறலியும் புலவரை வணங்கி விடைபெற்று ஓய்மா நாட்டுக்குப் புறப்பட்டனர்.

திறவாக் கண்ண
  சாய்செவிக் குருளை
கறவாப் பால்முலை
  கவர்தல் நோனாது
புனிற்று நாய்குரைக்கும்
  புல்லென் அட்டில்
காழ்சோர் முதுசுவர்க்
  கணச்சித லரித்த
பூழி பூத்த
  புழற்கா ளாம்பி
ஒல்கு பசி உழந்த
  ஒடுங்கு நுண் மருங்குல்
வளைக்கைக் கிணைமகள்
  வள் உகிர்க் குறைத்த
குப்பை வேளை
  உப்பு இலி வெந்ததை
மடவோர் காட்சி
  நாணிக் கடை அடைத்து
இரும்பேர் ஒக்கலொடு
  ஒருங்கு உடன் மிசையும்
அழி பசி வருத்தம்
  வீடப் பொழி கவுள்
தறுகண் பூட்கைத்
  தயங்கு மணி மருங்கின்
சிறுகண் யானையோடு
  பெருந்தேர் எய்தி
யாம் அவணின்றும் வருதும்
  ....

— சிறுபாணாற்றுப்படை

[சாய்செவிக்குருளை — வளைந்த செவியுடைய குட்டி; கறவாப் பால் முலை கவர்தல் — பிறரால் கறக்கப்படாத பாலினையுடைய முலையை உண்ணுதல்; நோனாது —பொறாமல்; புனிறு—ஈன்றணிமை; புல்லென்—அழகு இழந்த; அட்டில்—அடுப்பு; காழ்சோர் — கூரைக் கழி விழுகின்ற; கணச்சிதல்—கறையான் கூட்டம்; பூழி — புழுதி; காளாம்பி—காளான்; ஒல்கு—தளர்தற்கு; உழந்த—வருந்திய; மருங்குல்—இடுப்பு; கிணைமகள் கிணைவனுடைய மனைவி; வள் உகிர்—கூரிய நகம்; குறைத்த—கிள்ளின; வேளை—வேளைக்கீரை; ஒக்கல்—சுற்றம்; வீட—ஒழிய; பொழிகவுள்—மதம் பொழியும் கதுப்பு; தறுகண்—கொடுமை; பூட்கை—வலிமை; தயங்கு—அசைகின்ற; மருங்கு—பக்கம்; அவணின்று—அவ்விடமிருந்து]

தோற்றம்

சிங்கப்பூர்த் தோழர் வே. கோவிந்தசாமி அவர்களின் வாழ்க்கைத் துணைவியார் இலட்சுமியம்மாளுக்குத் திருவள்ளுவர் ஆண்டு 1982 மாசித்திங்கள் 6ம் நாள் (18—2—1951) ஞாயிற்றுக்கிழமையன்று ஆண் குழந்தை பிறந்த செய்தியறிய மகிழ்கின்றோம். குழந்தைக்குத் 'தினமணி' என்று பெயரிடப்பட்டிருக்கிறது.

சீர்திருத்தவாதி

உதயம்

காலேஜ் விடுமுறைக்காக என் அத்தை வீட்டுக்குச் சென்றிருந்தேன். அது ஒரு கிராமம். அழகான கிராமம். அது மிகவும் அழகான கிராமம் என்பது கொஞ்சநாள் கழித்துத்தான் தெரிந்தது.

வீட்டு முகப்பில் உட்கார்ந்து புத்தகம் படித்துக்கொண்டிருந்தேன். காலை நேரம்.

"பால் தருகிறீர்களா அத்தை" என்ற மதுரமான குரல் எங்கிருந்தோ கேட்டது. திரும்பினேன். ஒரு அழகான பெண் நான் உட்கார்ந்திருந்த அறையைத் தாண்டி உள்ளே போனாள்.

ஒரு கணநேரம்தான் நான் அவளைப் பார்த்தேன். என்ன, நாம் கனவுலகில்தான் சஞ்சரிக்கிறோமா என்கிற சந்தேகம் உண்டாய்விட்டது எனக்கு.

மெருகிடப்பட்ட பொன் தட்டைப்போல பளபளத்தது அவள் மேனி. காற்றில் லேசாக அசைந்த அவள் புடவைத் தலைப்பு என் உள்ளத்தை அசைத்துவிட்டது.

அவள் திரும்பினாள் பாலை வாங்கிக்கொண்டு. பால் செம்பைக் கையில் எடுத்துக் கொண்டு அவள் வந்த காட்சி?

வன தேவதையைப் பற்றிய வர்ணனைகளைத்தான் கேள்விப்பட்டிருக்கிறேன். ரம்பையையும் மேனகையையும் நான் கண்டதில்லை. ரதியின் அழகைப் பற்றிப் புத்தகத்திலிருந்து தெரிந்துகொண்டதோடு சரி.

ஆனால் அவளை நான் பார்க்கும்போது எல்லா அழகிகளையும் ஒரே இடத்தில் பார்த்தது போலிருந்தது.

அவள் அழகை நான் ரசித்தேன். எனக்கு அடிக்கடி அவளைப் பார்த்துக்கொண்டிருக்க வேண்டும்போல் ஆசையாக இருந்தது. என் ரசிகத் தன்மை என் மனதில் ஒரு வித ஏக்கத்தை உண்டுபண்ணியது. இரவில் தூக்கம் சரியாக வரவில்லை. இவைதான் காதல் நோய்க்கு அறிகுறிகள் என்று விஷயமறிந்த வைத்தியர்கள் சொல்வார்கள்.

அவள் கழுத்திலே ஒரே ஒரு மெல்லிய சங்கிலி மின்னிறது. இடையிலே ஒரு சாதாரணப் புடவையை உடுத்தியிருந்தாள் அவள்.

"அதே ஒரு தனி அழகுதான்" என்று என் மனம் சொல்லிற்று. அவளை அடைய வேண்டுமென்கிற ஆசை இதயத்தில் இடம்பெற்றது.

ஜன்னலில் உட்கார்ந்து கொண்டு எதிர்வீட்டுத் திண்ணையிலோ, உள்ளேயோ நிற்கும் அவளைப் பார்ப்பேன்- அவளழகை அள்ளிப் பருகுவேன். ஆசைதீர என் கண்களுக்கு விருந்துவைப்பேன்.

"இப்படி ஒரு பெண் வாழ்க்கைத் துணைவியாகக்

கிடைத்துவிட்டால், கவலை என்பது இருக்குமா? துக்கம் என்பதற்கு அப்புறம் அர்த்தம் தான் உண்டா? சொர்க்கம் என்பது வேறு? மனிதனுடைய வாழ்வில் இதைவிடப் பெரிய லட்சியம் வேறென்ன இருக்கப் போகிறது? இன்பம் வாழ்வில் "துள்ளி விளையாடுமே" என்றெண்ணினேன்.

நாட்கள் ஓடின. அவள் என்னைப் பார்த்தாள் பிறகு தினமும் என்னைப் போலவே பார்க்க ஆரம்பித்தாள். அவள் பார்வையில் சிரிப்பு சிங்காரப் பண் பாடிற்று. கண்கள் காதல் மொழியைக் கற்பித்தன. கன்னங்கள் குழிவிழுந்து உள்ளத்தைக் கொள்ளைகொண்டன.

அத்தையிடம் சென்று அவள் யாரென்று விசாரித்தேன். "ஏன் அத்தை, நம் வீட்டுக்குத் தினம் பால் வாங்க வருகிறதே யாரது அந்தப் பெண்?" என்றேன்.

"செந்தாமரையைக் கேட்கிறாயா? இப்போதுதான் அது அறுத்துப்போச்சு. பாவம் யாரோ ஒரு நோயாளிக்குக் கொண்டு கொடுத்தார்கள். அவன் ஆறுமாசத்திற்கெல்லாம் செத்துப்போயிட்டான். அவனைக் கல்யாணம் பண்ணிக்கிட்டு இந்தப் பெண் ஒரு சுகத்தையும் அனுபவிக்கலே. அது கொடுத்துவச்சது அவ்வளவுதான்" என்றாள் வருத்தத்துடன் அத்தை.

என் மனத்தில் திடீரென்று ஒரு பிளவு ஏற்பட்டது. அந்தச் செய்தி எனக்கு அதிர்ச்சியைக் கொடுத்தது. வாயில் தின்னப் போன பொருளை யாரோ பிடுங்கிவிட்டாற் போல இருந்தது. "செந்தாமரை ஒரு விதவை. அவள் ஒரு விதவை" என் மனம் உருப்போட்டது ஒரு பெருமூச்சு வெளியே வந்தது. நெஞ்சில் துக்கம் ஏறிக் கொண்டது.

என் மனம் எண்ணியது.

அவள் அழகு—கடலில் விட்டெறிந்த காசு; வானிலிருந்து விழுந்துவிட்ட விண்மீன்; உடைந்த சிலை; கிழிந்த சித்திரம், யாருக்கும் பயன்படாமல் காட்டிலே பூத்த ஒரு பூ.

ஏன் என் மனம் இப்படி எண்ணுகிறது? என் சீர்திருத்த நோக்கங்களெல்லாம் எங்கே? மறுமலர்ச்சிக் கொள்கைகளெல்லாம் எங்கே ஓடி ஒழிந்து கொண்டன? மகாத்மா காந்தி கைம்பெண்களைப் பற்றிச் சொன்னதை எத்தனை காலேஜ் மீட்டிங்குகளில் எடுத்து விளாசி யிருக்கிறேன். அப்போது பேசிய அந்தத் தைரியம் இப்போது எங்கே? ஏன் அது முன்னுக்குவர அஞ்சுகிறது?

* * *

"நான் ஒரு சீர்திருத்தவாதி. சீர்திருத்தவாதி என்று சொல்லிக்கொள்ளப் பெருமைப் படுகிறேன். பழங்கொள்கைகளிலேயே மூழ்கி அதையே ஜபம் பண்ணுகிறவர்களுக்கு நான் ஒரு அதிர்வேட்டு. சமூகத்தின் முட்டாள்தனமான கட்டுப்பாடுகளைத் தகர்க்கவந்த பீரங்கி. ஆம்! நான் ஒரு புது நாட்டை விரும்புகிறேன். அறிவு ஆட்சி செய்கிற நாடு,

ஆண்மைத்தனம் வீறிடுகின்ற நாடு, ஏழ்மைத்தனம் ஒழிந்த நாடு, பெண் விடுதலைபெற்ற நாடு, விதவைத் துயர் நீங்கிய நாடு—இத்தகைய ஒரு நாட்டைத்தான் நான் விரும்புகிறேன்......இத்தகைய நாடு வர, நாட்டை உருவாக்க நாம் எல்லோரும் பாடுபடுவோமாக" இப்படிச் சுமார் நாற்பது பொதுமேடைகளில் பேசியிருக்கிறேன்.

தினந்தினம் சீர்திருத்தத்தைப் பற்றிப் பேசி என் நண்பர்களின் மனத்தை அப்படியே மாற்றியிருக்கிறேன்.

சுமார் பத்தொன்பது சிறு கதைகளைச் சிந்தித்து எழுதிய சீர்திருத்தக் கதைகளை— உணர்ச்சி வேகத்தில் உருப்பெற்ற உன்னதக் கதைகளை— நான் எழுதியிருக்கிறேன்.

என் நண்பர்கள் என்னைப் போன்ற சீர்திருத்தவாதியுடன பழகுவதைப் பெருமையாக எண்ணினார்கள். என்னைச்சுற்றிலும் எப்போதும் அவர்கள் சூழ்ந்திருப்பார்கள். என் வாயிலிருந்து விழுந்த வார்த்தைகள் பெரு மதிப்பைப் பெற்றன. நாட்டை—ஒரு புது சமுதாயமாக மாற்ற நம்மால்தான்

ஆகப்போகிறது என்கிற எண்ணம் என்னுள் நடமாடியது.

கிராமங்களுக்குக் கால் நடையாகச் சென்று பிரசாரம் செய்தேன். பெரிய அறிஞர்களுடன் கடிதமமூலம் தொடர்பு வைத்துக்கொண்டு பெரும்பொருள் பற்றி விவாதித்தேன். பெரிய பேராசிரியர்களைக் கண்டு அளவளாவினேன். எப்போதும் 'சிஷ்யக் கூட்டத்தை' அருகிலேயே வைத்துக்கொண்டு பெருமைப்பட்டேன்.

* * *

ஆனால் இன்று என்மனம் மௌனம் சாதிக்கிறது!

அத்தை அன்று வீட்டிலில்லை. அவள் வந்தாள். அத்தை வெளியே சென்றதைப் பார்த்துக்கொண்டிருந்தாள் அவள். இருந்தும்? என்னை நாடியா?

"அத்தை இல்லை?" என்றாள் என்னைப் பார்த்து.

"இல்லையே" என்றேன் சிரித்துக்கொண்டே.

"அத்தைவர நாழியாகுமா?" என்றாள் மீண்டும். களங்கமில்லாமல் பேசும் குழந்தையைப் போல.

"இதோ வந்துவிடுவார்கள். உட்காரேன்"

"ஆண்பிள்ளைக்கு எதிரில் உட்காருவார்களா?'

"என் உட்கார்ந்தால் என்னவாம்?"

அவள் சிரித்தாள். ஆசையை மூட்டும் சிரிப்பு.

"இன்று நீ எவ்வளவு அழகாய் இருக்கிறாய் தெரியுமா?" என்றேன் நான்.

"நீங்கள் மாத்திரம்" இது அவள் பதில்.

"செந்தாமரை"

"உம்......"

"இதோ பாரேன்" என்று சொல்லிக்கொண்டு அவள் கைகளைப் பற்றினேன்.

"நான் உங்களுக்கு என்றுவதில் எனக்கு மனப்பூர்வமான ஆசைதான். ஆனால் வாழ்வு பூராவும் என்னை விட்டு விடுவதில்லை என்கிற உறுதி மாத்திரம் உங்களிடம் இருக்குமானல்."

என் நிலை தடுமாறியது. விதவையுடன் வாழ்வு பூராவும்? அவள் ஒரு விதவை அவள் ஒரு விதவை. விதவை... கசங்கிய மலர் - ருசிக்கப்பட்ட தேன் - புனிதத்தன்மை போய் விட்ட கோயில்.

என் கைகள் நடுங்கின. அவளை விட்டு விட்டேன். என் கோழைத்தனம் என்னைக் காட்டிக்கொடுத்துவிட்டது. என் பேடித்தனம் வெற்றிகண்டு விட்டது.

என் தைரியமற்ற தன்மையைக் கண்டு அவள் அழுதிருக்க வேண்டும். இல்லை கைகொட்டிச் சிரித்திருப்பாள். "இவ்வளவுதானா உங்கள் சீர்திருத்தம்" என்று இடித்துக் காட்டியிருப்பாள்.

அவள் அழகிதான்—ஆனால் விதவை

இளமங்கைதான் — ஆனல் சமூக முத்திரை குத்தப்பட்டுவிட்டது அவள் வாழ்வுக்கு ஏற்றவளல்லவென்று.

நான் மறுநாளே காலேஜுக்கு கிளம்பினேன். என் மனச்சான்றுக்கே துரோகம் செய்து விட்டாற்போல என் மனம் அடித்துக்கொண்டது.

ஒரு முழுஆண்டு உருண்டு ஓடிவிட்டது. அத்தை வீட்டுக்குச் சென்றேன்: பழைய எண்ணங்களை—நினைவுகளை என் மனம் மறந்து விடவில்லை.

எதிர்ச் சரிவை என் கண்கள் நோக்கின. அதே வீடு. அதே 'அவள்.' அதே இடத்தில் வழக்கம்போல நின்றுகொண்டிருந்தாள். அவள் அழகு இப்போது அலங்காரத்துடன் மிளிர்ந்தது. உயர்ந்த புடவையை அவள் கட்டியிருந்தாள். நகைகள் அவள் கழுத்திலிருந்து பளிச்சிட்டன.

என்னைக் கண்டவுடன் அவள் சிரித்தாள். என்னால் பதிலுக்குச் சிரிக்க முடியவில்லை. குனிந்துகொண்டே உள்ளே ஓடிவிட்டேன்.

“ஏன் அத்தை? இப்போது அந்தப் பெண்ணை யாருக்காவது கட்டிக்கொடுத்துவிட்டார்களா?” என்று அத்தையிடம் கேட்டேன்.

“இல்லை” என்றாள் சாவதானமாக.

“பின்?”

“அது கெட்டுப்போயிட்டுதடா”

“ஐயோ!” என்று அலறினேன்.

யாரோ என்னைச் சித்திரவதை செய்வதுபோல இருந்தது. உயிர் போகும்வரையில்

மக்கள் பெருக்கத்தின் அபாயத்தை தடுக்க
கர்ப்பதடைக்கு
விஞ்ஞானமுறைப்படி தயாரிக்கப்பட்ட மிருதுவான அமெரிக்கன் கருவிகள்
ஆண், பெண், கையாள்வது
செட்டு விலை ரூ 3-0-0 தபால்சிலவு 0-8-0
MULLER & Co. (31. BEAT) G.T. MADRAS.1.

பாறையில் முட்டிக்கொள்வது போல இருந்தது.

அவள் சிரித்தாள் — என்னை ஒரு பேடி என்று எண்ணி.

அவள் பார்த்தாள் — வாழ்விலே வெற்றிகண்டுவிட்ட மிடுக்கை அவள் கண்களிலே காட்டி.

நான் தலை குனிந்தேன். என் சீர்திருத்தப் பேச்சுக்களெல்லாம் வெறும் வாய்த் தத்துவங்களாகமாறிப் போய்விட்டன. என் வீர முழக்கங்களெல்லாம் வெறும் வெத்துவேட்டாகப் போய்விட்டன. நான் வாழத் தகுதியற்றவன்.

அவள் வாழ்வைநான் சீர்படுத்தியிருக்கமுடியும். ஆனால், நான் ஒரு உபயோகமற்ற பேடி என்பது நிரூபிக்கப்பட்டுவிட்டது.

நான் ஒரு முறுக்கில்லாத நூல்—குரைக்கும் நாய்.

பாரதியார் என்னைப் பற்றித்தான் தீர்க்க தரிசனமாகப் பாடினாரா?

“நெஞ்சிலுரமு மின்றி
நேர்மைத் திறமு மின்றி
வஞ்சனை சொல்வாரடி
—கிளியே
வாய்ப் பேச்சில் வீரரடி.”

வளரும் இலக்கியம்

யாத்திரை

சக்தி காரியாலயத்தார் வரிசையாக வெளியிட்டுவரும் புதிய முறைத் தொகுப்பு நூற்களில் இது ஒன்று. பெறாத பிள்ளை, யாத்திரை, சொல்லாத சொல் முதலிய கதை, கவிதை, நாடகங்கள் இதில் அடங்கியிருக்கின்றன. லூயிஜி பிரண்டல்லோ என்னும் இத்தாலிய ஆசிரியர் எழுதிய 'பெறாத பிள்ளை' என்ற மொழி பெயர்ப்புக் கதை நம் சிந்தனையைத் தூண்டுவதாய் அமைந்துளது. இதில் வரும் கிழவியின் மன இயல்புகள் நன்றாக விளக்கப்பட்டிருக்கின்றன. அவளை மறந்துவிட்ட இரண்டு பிள்ளைகளிடம் வைத்திருக்கும் அளவற்ற பாசத்தில் ஒரு துளி கூட அவள் 'பெறாத பிள்ளை'யிடம் வைக்க மறுக்கிறாள். அவனைப்பற்றிய பேச்சை எடுத்தாலே நடுங்கிச் சாகிறாள். இத்தனைக்கும் அந்தப் பிள்ளை தன்னுடைய 'பெறாத தாயை'ப் பெரிதும் நேசிக்கத்தான் செய்தான். இருந்தும் அந்தப் பிள்ளையைப் பெறாத பிள்ளையாகவே மதிக்கிறாள். அதில்தான் அந்தத் தாயை நடுங்கச் செய்யும் பயங்கர உண்மை அடங்கிக் கிடக்கிறது. ஒரு கிழவியின் அந்தியகால மனநிலைகளை வெகு அருமையாகச் சித்தரித்துள்ளார் ஆசிரியர். மொழி பெயர்ப்பும் நல்ல சுவையோடு மிளிர்கின்றது.

கு. அழகிரிசாமி எழுதியிருக்கும் 'சொல்லாத சொல்' என்னும் நாடகம் இத்தொகுப்பில் முக்கியமானதொன்று. இந்நாடகத்தில் முக்கியப் பாத்திரமாக வந்து செல்லும் மீனாவின் மீது நமது அநுதாபம் கரைபுரண்டோடுகிறது. வாழ்க்கையில் அவள் காணும் ஆசைக் கனவுகளும் காதல் நினைவுகளும் ஒன்றிரண்டு சொற்கள் மூலமாக மட்டுப் வெளிப்பட்டு, முடிவில் செடியினின்றும் உதிர்ந்துவிட்ட மலரைப்போல் மக்கி மறைந்துவிடுகின்றன. சாதாரண இந்த நிகழ்ச்சியானது, ஆசிரியர் எடுத்துக்காட்டும் திறமையினால், நமது இரக்க உணர்ச்சியைத் தூண்டி இதயத்தைத் தொடுகிறது. நாடகத்தில் மெதுவான ஓட்டமே இருப்பினும் காதலின் மெல்லிய கோடுகள் எடுத்துக்காட்டப்பட்டிருக்கின்றன. இன்றைய 'புதுயுக' எழுத்துலகில் 'காதல், காதல்' என்று இரைச்சலிட்டுக் கொண்டு, முரட்டு வசனங்களைச் சூறையிடும் 'குட்டி மாபஸான்கள்' அவசியம் இதனைப் படிக்க வேண்டும்.

தர்ம புருஷன் — எமனை இளிச்சவாயனாக்கும் செல்லரித்துப்போன பழைய சத்தியவான் — சாவித்திரி கதைதான் திரும்பவும் நாவல் நடையில் வாந்தியெடுக்கப்பட்டிருக்கிறது. கதை முடிவில் ஆசிரியர் தான் எடுத்துக்கொண்ட தலைப்புக் கேற்பச் சிறிது மாற்றம் செய்திருக்கிறார்.

அம்மாற்றம் அத்துணை சிறப்பானதுமன்று; வரவேற்கத்தக்கதுமன்று.

விஜயராங்கம் என்பவர் எழுதியுள்ள 'யாத்திரை' என்ற கவிதைப் பெயரே புத்தகத் தலைப்பாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதனைவிடப் 'பெறாத பிள்ளை' என்ற தலைப்பு சிறப்பாக இருந்திருக்கும். மொத்தத்தில் இத் தொகுப்பு பாராட்டத்தக்க முறையில் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது. 88 பக்கங்கள் விலை ரூ. 1-0-0

கம்பன் என் காதலன்

இந்தத் தொகுப்பில் காணப்படும் **'கம்பன் என் காதலன்'** என்ற கவிதையைத் திருச்சிற்றம்பலக் கவிராயர் எழுதியுள்ளார். ஆலிவ் ஷ்ரீனர் என்ற ஆப்பிரிக்க ஆசிரியையின் பொழுது புலர்ந்தது என்ற கதை ஒன்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. கு. அழகிரிசாமியின் மொழிபெயர்ப்பு தெளிவான நடையில் அமைந்திருக்கிறது. இக்கதையில் நரகம்—சொர்க்கம் இரண்டுக்குமுள்ள வேறுபாடுகள் சித்தரிக்கப்படுகின்றன. மொழிபெயர்ப்புக் கதைகள் தமிழ் இலக்கியத்திற்கு அதிகம் தேவை என்பதற்காக, நரக — சொர்க்கங்களைப்பற்றிய தத்துவக் கதைகளை நாம் வரவேற்க முடியாது. இத்தகைய கதைகளினால் தமிழ் இலக்கியம் வளர்ந்துவிடும் என்றும் கூறுவதற்கில்லை.

எஸ். வையாபுரிப்பிள்ளை 'வளரும் மொழி - உரைநயம்' என்ற கட்டுரையில் தமிழ்மொழியில் உரைநடை எவ்வாறு அமைந்தால் உரைநயம் தோன்றக்கூடும் என்பதை ஒரு சில நியதிகளால் வற்புறுத்துகிறார். முதலாவதாகப் பிறமொழிகளிலிருந்து நிறையக் கடன் சொற்கள் தேவையென்றும் பின்னர் இலக்கியச் சொற்களை விடுத்து எளிய சொற்களைக் கையாளுதல் வேண்டுமென்றும் கூறுகிறார். பின்னதை ஓரளவுக்கு நாம் ஒப்புக்கொண்டாலும் எளிய சொற்கள் வேண்டுமென்னும் தேவைக்காக, நல்ல இலக்கியச் சொற்களை ஒதுக்கிவிட்டுக் கடன் சொற்களைக் கையாளுதல் தக்கதன்று. நல்ல தமிழைப் பொருள் விளங்காத காரணத்துக்காக ஒதுக்கிவருவது வளரும் மொழியைக் கொஞ்சங் கொஞ்சமாகச் சாகடிப்பதற்குச் சமம்தான். மேலும் ஆசிரியர் குறிப்பிடும் உயிராற்றலும் உரைநயமும் கடன் சொற்களினால் ஒரு மொழிக்கு ஏற்பட்டுவிடாது. ஆசிரியர் எடுத்துக்காட்டும் மேற்கோள்கள் அவர் கூறும் நியதிகளுக்குப் புறம்பானதாயிருக்கின்றன. "ஸ்தூலித்துச் சதை வளர்ந்த சரீரம்..." என்பதில் எந்த உயிராற்றல் — உரைநயம் நிரம்பியிருக்கிறதோ!

பொக்காச்சியோவின் டெக்கமரானிலிருந்து பத்துக்கதைகளைத் தமிழில் சொல்லியிருக்கிறார் கு. அழகிரிசாமி. இந்தத் தொகுப்பிலேயே உயிராற்றலும் உரைநயமும் சிறந்து விளங்குவது ரகுநாதனின் பிரிவுபசாரம் ஒன்றுதான். 102 பக்கங்கள் விலை ரூ. 1-0-0.

காவியக்காதல்

இதுவும் மேற்கூறிய வரிசையில் வெளிவந்துள்ள தொகுப்பேயாகும். எஸ். வையாபுரிப் பிள்ளை எழுதியிருக்கும் **'இராமலிங்க சுவாமிகள்'** என்ற கட்டுரை, அடிகளின் கவிதை ஆற்றலைப்பற்றியும், வாழ்க்கை நிகழ்ச்சிகளையும் சுருக்கமாக எடுத்துக்கூறுவதாக அமைந்துள்ளது. **ஏசல் பாட்டு** என்ற தலைப்பில் பழைய ஏட்டுப் பிரதியிலிருந்ததாகச் சொல்லப்படும் சில பாடல்களை அச்சில் கொண்டு வந்திருக்கிறார்கள். "ஏட்டுப் பிரதியிலுள்ளதை அச்சிடவேண்டும் என்ற ஒரே நோக்கத்துடன் தான் இதை வெளியிடலாயிற்று' என்று பதிப்பாசிரியர் கூறியிருப்பதனால் இதனைப்பற்றிய விமர்சனத்தை விட்டுவிடலாம். ஏனெனில், பாடல்கள் சுவையுள்ளவையாகவோ உயிர்த்துடிப்புள்ளவையாகவோ இல்லை. **கம்பனுடைய பாடல்கள் வாயிலாக இந்திரஜித் தின் குண இயல்புகளைக்** காண்கிறார் ல. சண்முக சுந்தரம் என்பவர். கு. அழகிரிசாமி தமிழில் சொல்லியிருக்கும் ஏழு வேதாளக் கதைகளும் பயனற்றவை. பாட்டிகள் சொல்லிச் சொல்லி அலுத்துப் போனவை. இத்தகைய சத்தற்ற விடுகதைகளை மொழிபெயர்த்துக் குவிப்பதினால் இலக்கியம் விரியும் என்று எண்ணுவதற்கில்லை.

புத்தகத்திற்குத் தலைப்பாக அமைந்திருக்கும் **காவியக் காதல்** என்னும் டச்சுக் கதையைத் தொ. மு. சி. மொழிபெயர்த்திருக்கின்றார். இந்தக் கதையில் வரும் பெண், இலக்கியச் செறிவுள்ள வார்த்தைகளிலும் எழுத்துக்களிலும் தன் மனதைப் பறிகொடுப்பவளாகச் சித்தரிக்கப்பட்டிருக்கிறாள். கதையில் உயிரோட்டமே இல்லை. மொழிபெயர்ப்பும் சிறப்புடையதாக அமையவில்லை. வலிந்து வலிந்து வார்த்தைகள் கோக்கப்பட்டிருக்கின்றன. சில வார்த்தைகளைப் பொருத்தமில்லாத இடங்களிலெல்லாம் திரும்பத்திரும்ப நுழைத்திருக்கிறார். இது படிப்போருக்கு உற்சாகத்தைத் தராது.

மக்கள் பெருக்கத்தின் அபாயத்தைத் தடுக்க

கர்ப்பதடைத்து

விஞ்சானமுறைப்படி தயாரிக்கப்பட்ட
மிருதுவான அமெரிக்கன் கருவிகள்
ஆண், பெண், கையாள்வது
செட்டு விலை ரூ 3-0-0 தபாலசிலவு 0-8-0

MULLER & Co. (31. BEAT) G.T. MADRAS.1.

"சியாமள ஹம்சங்கள்", "சர்வாலங்காரங்களும் நிறைந்த தன் கவிதாரூபியான புஷ்பா தேவியின் லக்ஷணாம்சங்களைக்கண்டு", "பௌராணிகப் பதப் பிரயோகம்" — போன்ற தொடர்கள் தமிழ் மொழிக்கு ஆக்கந்தருபவைகள்தாமா என்பதைச் சிந்திக்க வேண்டும். மொழிபெயர்ப்பு என்றால் வார்த்தைக்கு வார்த்தை அப்படியே சொல்ல வேண்டுமென்பதல்ல. அப்படி மொழிபெயர்க்கப்படுபவை சிறப்பைப் பெறா.

"அவள் போமனாவைப்போல் ப்ளோராவைப்போல் அழகு நிறைந்து விளங்குவதாக......" என்பதில் அழகுக்கு உவமையாக எடுத்துக்கொள்ளப்பட்ட போமனா, ப்ளோரா என்ற வார்த்

அடிக்கடி 'உத்தியோகம்'
என்பார் — அதை
அலுவல் என்றுரைத்திடு தம்பி
படிப்பது வாசித்தல்
இரண்டிலும் — உன்
பழந்தமிழ் முன்னது தம்பி
— பாரதிதாசன்

தைகள் எதைக்குறிக்கின்றன? அல்லது யாரைக்குறிக்கின்றன? இன்னொன்று:

"எல்லாம், சைத்ரிகர் ராபேலுக்குப் பின் வந்த மறுமலர்ச்சிச் சைத்ரிகர்கள் தீட்டிய அலங்காரக் கோலம்போல், லூக்கா டெல்லோ ரோபியாவிலுள்ள பூவேலைத் தளவரிசையைப் போல்..." இதில் வரும் ராபேலையும் லூக்கா டெல்லோ ரோபியோவையும் யார் கண்டார்கள்? மூலத்தில் இவை சிறப்பாக அமைந்து விட்டிருக்கலாம். ஆனால் தமிழில் உயிரற்ற சவம் போலத்தான் இவ்வுவமைகள் காட்சியளிக்கின்றன. இத்தகைய புரியாத உவமைகளை அப்படியே எடுத்துப்போட்டுக் குழப்புவதைவிட, நேரடியாக விஷயத்திற்குச் சென்று விடலாம். 96 பக்கங்கள். விலை ரூ. 1—4—0.

[குறிப்பு:— மேற்கண்ட மூன்று நூல்களும் கிடைக்குமிடம் 'சக்தி' காரியாலயம் — ராயப்பேட்டை — சென்னை-14]

— அரசன்.

வரப்பெற்றோம்

நான் பாடியவை: இயற்றியது இரா. சண்முகம். வெளியிட்டோர் சி. புலியரசு, 125, கோவிந்தப்ப நாயக்கன் தெரு, சென்னை-1. விலை அணா 4.

1. பிணக்குவியல் விலை அணா 4.
2. டெல்லியின் சுதந்திரக் கீதம். விலை அணா 2. எழுதியது திரு எஸ். ஐ. அருள்தாசன். வெளியிட்டோர்: குமரன் நினைவுப் பதிப்பகம், ராபர்ட்சன்பேட்டை கே. லார்பொன்வயல்.

திராவிடத்தென்றல் (இரண்டாவது வெளியீடு) பதிப்பாசிரியர் அ. ச. பாலு. ஆராய்ச்சிப் பதிப்பகம். பொள்ளாச்சி. விலை அணா 2.

யார் இந்த ம. போ. சிவஞானம்? எழுதியது வெற்றி வீரன், வெளியிட்டோர்: பொது மேடைப் பதிப்பகம், சென்னை-4. விலை அணா 4.

பெரியார்பாடல்: இயற்றியர் மணிமுகம். வெளியிட்டோர்: தமிழ்ச்செல்வி செயலகம், 63, கல்லத்தி முடுக்குத் தெரு, திருநெல்வேலி. விலை அணா 2.

காணிநிலம் (ஆரம்ப மலர்) ஆசிரியர் எஸ். என். முனுசாமி ராஜு. கிடைக்குமிடம், காணிநிலம் பப்ளிசிடீஸ், நாராயண ராஜு தெரு, சேலம். விலை அணா $2\frac{1}{2}$.

அமுதம் (குழந்தைகளின் மாதப் பத்திரிகை) நிர்வாக ஆசிரியர்: டாக்டர் டி. அப்பாராவ் எல். ஐ. எம். கிடைக்குமிடம்: 18, வெங்கடேச நாயக்கன் தெரு, சென்னை-1. 56 பக்கங்கள் விலை அணா 4.

பகுத்தறிவு (மூன்றாவது இதழ்) ஆசிரியர்: ப. கண்ணன். கிடைக்குமிடம் 'பகுத்தறிவு' அலுவலகம், சலகண்டபுரம், சேலம்.

Edited, Printed and Published by MURUGU SUBRAMANIAN for PONNI LTD. at PONNI ACHAGAM, 16, Seni Amman Koil Street, Tondiarpet, Madras—21

...ஆவணக் காப்பக நூலகம் சென்னை 600 ...

வெளிவந்துவிட்டது!

சுகுமார் ஒரு கல்லூரி மாணவன். ஆனால் அவன் அங்கு படித்தானா? இல்லை. கண்ட பெண்களைக் கண்ணடிப்பது; காமக் குளத்தில் நீச்சடிப்பது; காலிகளுடன் ஊர் சுற்றுவது; இது தான் அவன் வேலை. இப்படியிருந்த ஒரு காலி, கமலா என்ற ஒரு பெண்ணின் நட்பினால் கண்யவானாக மாறினான்; ஒழுக்கத்தின் பிறப்பிடமானான்: எப்படி?

இன்றே படியுங்கள்.

"காதலோ காதல்"

ஆசிரியர்: ரா. தணலன். விலை 0-8-0

பெரியவர்கள் மட்டும் படிக்கவேண்டிய புத்தகம்.

கருப்பு முல்லை. ... ஜெகசிற்பியன் விலை 0-8-0

சாவின் முத்தம். ,, விலை 0-12-0

சிறுவர் புத்தகம்

வீரபாண்டியன் - நீலமேகன் - விலை 0-3-0

கழிவு 25% செலவு இனாம்

குறிப்பு:— V. P. யில் அனுப்பவேண்டுமானால் ரூ. 2-0-0 முன்பணம் அனுப்ப வேண்டும். 10 பிரதிகளுக்குக் குறைந்த ஆர்டர் கவனிக்கப்படமாட்டாது.

ஏஜண்டுகள் தேவை.

-: விவரங்கட்கு :-

கோவை பாரிநிலையம்

ஒப்பணக்கார வீதி — கோயமுத்தூர்

எதிர்பாருங்கள்! எதிர்பாருங்கள்!!

விரைவில் ஆரம்பமாகிறது.



தங்கம் டாக்கீஸ்

டெலிபோன் : 2523

நவீன R. C. A. மாடல் 230 டபுள் புரோஜெக்டருடன் கூடியது.

திருவொற்றியூர் ஹைரோடு, சென்னை-21

(டோல்கேட் அருகில்)

நிர்வாகம்

P. M. A. தங்கப்ப நாடார் & கோ

302, திருவொற்றியூர் ஹைரோடு, சென்னை — 21

தங்கசாலை பஸ் நிலையத்திலிருந்து 56 நிர் வண்டியிலேறி தியேட்டருக்கு வர வசதியாக உள்ளது.

Wrapper printed at Ponni Achakam ...s—21